சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 29.03.2022 supeedsam.com supeedsam@gmail.com







# பிரதமராகிறார் ரணில்?

## முன்னாள் பிரதமர் புதிய முக்கிய பங்களிப்பை வழங்கவுள்ளமை குறித்து ஐக்கிய தேசிய கட்சி கருத்து

முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க விரைவில் முக்கிய பங்களிப்பொன்றை வழங்கவுள்ளார் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

விரைவில் தேசிய கருத்தொருமைப்பாடு ஏற்படும் இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக அனைத்து கட்சிகளும் ஒன்றுபடும் இதில் ரணில்விக்கிரமசிங்க முக்கிய பங்களிப்பை வழங்குவார் என ஐக்கியதேசிய கட்சியின் வஜிர அபயவர்த்தன செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். கட்சி அரசியலை மறந்துவிட்டு தேசிய கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதே தற்போதைய தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்கக்கூடிய திறமையான நபரிடம் நாட்டை கையளிக்க வேண்டும் என வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார். பொருளாதாரத்தை கையாள்வதற்கு மிகவும் பொருத்தமான நபர் ரணில்விக்கிரமசிங்கவே என அவர் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...



# ரணிலை பிரதமராக நியமிக்கும் எண்ணமில்லை

ரணில்விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கும் நோக்கம் இல்லை என அமைச்சர் ரோகித அபயகுணரட்ண தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நபர் ஒருவரை பிரதமராக நியமிக்கும் அளவிற்கு பொதுஜனபெரமுனவில் எவரும் பைத்தியக்காரர்கள் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பழைய அரசியல் கட்சியை சேர்ந்தவர் அந்த கட்சி நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை கூட கைப்பற்றமுடியாத கட்சி என பெயர்வாங்கியுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார். மிகவும் பொருத்தமான ஒருவர் பிரதமர்

02 ஆம் பக்கத்தில்...

# ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்கும் நிலைக்கு அரசு வங்குரோத்து அடையவில்லை

(ஊர்காவலன்)

ரணில் விக்கிரமசிங்கவிற்கு பிரதமர் பதவியை வழங்கும் நிலைக்கு அரசாங்கம் வங்குரோத்து அடையவில்லை என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று 28.03.2022 திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பஷில் ராஜபக்சவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கினார். அந்த கட்சிதான் இலங்கையில் இன்று பலம் வாய்ந்த கட்சி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுகூட மக்களை திரட்டும் சக்தி தங்களிடம் உள்ளதாகவும், பஷில் ராஜபக்ஷ சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர் எனவும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அவரை வீழ்த்துவதற்கு முயற்சிக்கின்றனர். அது நடக்காது எனவும் 2015 இல் ராஜபக்சேக்களை வீழ்த்த பார்த்தனர்.

02 ஆம் பக்கத்தில்...



# இன்று முதல் ஏழரை மணி நேர மின் வெட்டு

இன்று முதல் ஏழரை மணி நேரம் மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் மின் துண்டிப்பு பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

A, B, C, D, E, F, G, H, I, J, K, L பிரதேசங்களில் காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை 5 மணி நேரம் மற்றும் மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரை 2 மணி 30 நிமிடங்கள் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

P, Q, R, S, T, U, V, W – பிரதேசங்களில் காலை 08.30

02 ஆம் பக்கத்தில்...

# புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு கல்வி வலயம் இலங்கையில் இரண்டாம் இடம்!

(மட்டுநிருபர்)

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அகில இலங்கை பீதியான தரம் ஐந்து 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வலய கல்விபணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வலய கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், 2021 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்த நிலையில் அதனைத் தொடர்ந்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அகில இலங்கை ரீதியான தரம் ஐந்து 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பகுப்பாய்வுகளின் படி மட்டக்களப்பு கல்வி வலயம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற அடிப்படையில் இலங்கையில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையிலுள்ள 100 கல்வி வலயங்களுள் மட்டக்களப்பு கல்வி வலயம் 2ம் இடத்தைப் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் இருந்து 2050 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களுள் 449 பிள்ளைகள் வெட்டுப் புள்ளிக்குமேல் சித்தியைப் பெற்றிருக்கின்றார்கள். 2020ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 433 மாணவர்கள் வெட்டுப் பள்ளிக்கு மேல் சித்தி பெற்று அகில இலங்கை பீதியில் எமது வலயம் ஐந்தாம் இடத்தில் இருந்தது. தற்போது 2ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளோம்.

02 ஆம் பக்கத்தில்...



# வயிறு, வருமானம் குறித்து மட்டுமே நாட்டு மக்கள் சிந்திக்கக்கூடாது



(காந்தன்)

வயிறு குறித்தும் வருமானம் பற்றியுமே நாட்டு மக்கள் சிந்திக்கின்றனர். எனவே, தற்போதைய நிலைமையையும் நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு

02 ஆம் பக்கத்தில்...

# எதிர்காலத்தில் அரிசி கொள்வனவுக்காக வரிசையில் காத்திருக்கும் அபாயம்!

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி ஒரு கிலோ கிராம் 300 ரூபாவாக அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரிசி உற்பத்தியாளார்கள் சங்கத்தின் தலைவர் முதித் பெரேரா இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

அத்துடன், எதிர்காலத்தில் அரிசி கொள்வனவுக்காக வரிசையில் காத்திருக்கும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.











# மயிலம்பாவெளியில் மனைவி தூக்கிட்டதனை கண்டு கணவன் தூக்கிட்டு தற்கோலை

(செங்கலடி நிருபர்)

ஏறாவூர் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மயிலம்பாவெளி பிரதேசத்தில் மனைவி தூக்கிட்டு தற்கொலைக்கு முயற்சித்ததனை கண்டு சந்திரகுமார் கோபனா (28) என்பவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இருவரும் திருமணம் செய்து வாழ்ந்து வந்த நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட குடும்ப தகராற்றினால் வீட்டின் அறையினுள் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றதனை கண்ட கணவன் மனைவியை தூக்கில் இருந்து மீட்டெடுத்து அதே தூக்குக்கயிற்றில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இச்சபவத்தில் மனைவியான கணேசன் பிரதீபா (20)

02 ஆம் பக்கத்தில்...

# வெளிநாடுகளின் மத்தியஸ்தத்துடனேயே அரசாங்கத்துடன் கூட்டமைப் பேச வேண்டும்

அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பேச சொன்னால் அவர்களை மத்தியஸ்தம் வகிக்க சொல்லி கூறுங்கள். அதைவிடுத்து எந்தவித சர்வதேச மத்தியஸ்தம் இல்லாமல் அரசாங்கத்துடன் பேச செல்வதென்பது தற்கொலைக்கு ஒப்பானதென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.



வல்வெட்டித்துறையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்துடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு சுற்று பேச்சுவார்த்தை முடிவிலும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் எதை ஒப்புக் கொண்டது என்பது தொடர்பாக தமிழ் கூட்டமைப்பே தெரிவிக்கின்றது. ஆனால் அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக எதனையும் கூறவில்லை. இலங்கையில் எதுவாக இருந்தாலும் சர்வதேச அழுத்தத்தின் மூலம எமக்கு கிடைக்கும். அதை நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

இன்றைய நெருக்கடியில் இருந்து தப்பிப்பதற்காக அரசாங்கம் பேச்சு நடத்துமாக இருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடன்படக் கூடாது.

பேச்சுவார்த்தை என காலத்தை ஓட்டிக் கொண்டு செல்லாமல் நிகழ்ச்சிநிரலை தயாரித்து செயற்பட வேண்டும். இல்லையேல் ஈழத் தமிழினம் தொடர்ந்தும் ஏமாற்றப்படும் என்ற கதையாகத்தான் இருக்கும்.

தண்டனை விதிக்கப்பட்டு மேல்முறையீடு செய்யாதுள்ளவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க முடியும். இதில் உள்ள பிரச்சனை என்றால் சிலர் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தவர்கள் மாத்திரம் அந்தமேன்முறையீடுகளை மீளப்பெற்றால் மாத்திரம் அவர்களுக்கான பொது மன்னிப்பை ஜனாதிபதியால் வழங்க முடியும். ஆகவே இதை செய்வதற்கு ஒரு வாரம் இரண்டு வாரங்களுக்கு மேல் எடுக்கபோகின்றீர்கள் என்றால் வருத்தத்திற்குரியது.

காணி சுவீகரிப்பு தொடர்பாக ஜனாதிபதிக்கும் இராணுவத் தளபதிக்கும் புலனாய்வு அறிக்கைசெல்லவில்லை என்றால் அதனை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட காணி சுவீகரிப்பு வர்த்தமானி அறிவித்தல்களை ரத்து செய்ய கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும். என தெரிவித்துள்ளார்.







காரைதீவு விபுலானந்த தேசிய கல்லூரியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 130 ஆவது ஜனன தினம் அதிபர் ம. சுந்தரராஜன் தலைமையில் கொண்டாடப்பட்ட போது..

படம் வி.ரி. சகாதேவராஜா

## புலமைப் பரிசில் பரீட்சையில் மட்டக்களப்பு கல்வி வலயம் இலங்கையில்

அதேபோல் சித்தி பெறுதல் என்ற அடிப்படையில் எமது கல்வி வலயம் இலங்கையில் 26ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. இது 2020ம் ஆண்டு பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் முன்னேற்றகரமாக இருக்கிறது. 2020ஆம் ஆண்டு சித்தி பெற்ற மாணவர்களின் அடிப்படையில் 57ஆம் இடத்தில் இருந்தோம் தற்போது 26ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளோம்.

2020, 2021ம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் அசாதாரண சூழ்நிலையில் தரம் 4, 5 மாணவர்;களின் வகுப்புகள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும் ஏனைய வலயங்களையும் விட எமது வலய மாணவர்கள் மிகவும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

இதற்காகப் பாடுபட்ட எமது கல்வி வலயத்தின் அதிபர்கள், இடர் நிறைந்;த காலத்திலும் இவர்களை நேரடியாகவும், தொழில்நுட்பத்தினூடாகவும் கற்பித்த ஆசிரியர்கள், குறிப்பாக எமது கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவிற்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அவருடன் இணந்த ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகிய அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை ஆசிரியர் சங்கம் மட்டக்களபப்பு கல்வி வலயம் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்காகவே பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்துவதை நான் அவதானித்திருக்கின்றேன். எத்தவிதமான புள்ளி விபரங்களுமின்றியே இவ்வாறான குற்றச்சாட்டுகள் அவர்களால் முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் மிகவும் முன்னேற்றகரமான சித்திகள் கிடைக்கப்பெறுகின்றது.

இருப்பினும் உயர்தரத்தில் சில பாடத்துறைகளில் சற்றுப் பின்னடைவு இடர் காலத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் விடுபட்ட காலத்தில் ஏற்பட்டது. அதற்கான வேலைத்திட்டங்கள் அனைத்தும் நடைபெற்றிருக்கின்றது. நிச்சயமாக 2021ம் ஆண்டுக்கான பெறுபேறுகள் வெளிவர இருக்;கின்றது. அது அதிகரிக்கின்ற நிலையையே காண்பிக்கக் கூடியதாக இருக்கும். கொவிட் நிலைமைகளின் பின்னர் தற்போது ஒருவாறான சீரான நிலைமை வந்து கொண்டிருக்கின்றது. இதன்போது மாணவர்களுக்கு நாங்கள் பயிற்சிப் பரீட்சைகளை நடாத்தி வருகின்றோம். குறிப்பாக 2021ம் ஆண்டுக்கான சாதாரணதரப் பரீட்சைகள் இன்னும் நடைபெறவில்லை. அவற்றினை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் எதிர்வரும் மே மாதம் திட்டமிட்டிருக்கின்றார்கள்.

அந்தப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களுக்காக மூன்று பயிற்சிப் பரீட்சைகளை நாங்கள் ஆயத்தம் செய்திருக்கின்றோம். அவ்வாறே ஒவ்வொரு வகுப்புகளுக்கும் செயலட்டைகள் வழங்கியிருக்;கின்றோம். அத்துடன் அதிபர்கள் தத்தமது பாடசாலைகளினூடாக அவர்கள் பூர்த்தி செய்திருக்கின்ற பாடவிதானத்தின் அடிப்படையில் பயிற்சி வினாக்களையும் செயலட்டைகளையும் மட்டக்களப்பு கல்வி வலயம் மாத்திரமல்ல மாகாணக் கல்விப் பணிமனையினூடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் குறுங்குறிப்புகளை அச்சடித்து மாகாணம் முழுக்க வழங்கியிருக்கின்றார்கள். அது மாணவர்களுக்கு இத்தகைய இடர் நிறைந்த காலத்தில் துரித மீட்டலைச் செய்ய உதவியாக இருக்கும். இத்தகைய இடர் காலத்தில் மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாளர்களும் மிகவும் முயற்சியுடன் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்தார்.




# சம உரிமையுள்ள பிரஜைகளாக மாற, எமக்கு நீங்கள் உதவுங்கள்

## ஜெய்சங்கரிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை!



இலங்கை அரசுடன் உங்களுக்கு உள்ள நல்லுறவை பயன்படுத்தி, முழுமையான சம உரிமையுள்ள பிரஜைகளாக மாற, எமக்கு நீங்கள் உதவுங்கள் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம், தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரினை நேற்று திங்கட்கிழமை சந்தித்து பேசியபோதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு இந்திய தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்கள் பழனி திகாம்பரம், வே. ராதாகிருஷ்ணன், எம். உதயகுமார், ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இந்திய தரப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், தூதுவர் கோபால் பாக்லே, துணை தூதர் வினோத் கே. ஜேகப், அரசியல் துறை செயலாளர் பானு பிரகாஷ் மற்றும் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

இந்த சந்திப்பு குறித்து தமிழ் முற்போக்கு கூட்டணியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பில், தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்கனவே கடந்த சில தினங்களுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும்படி தூதுவர் கோபால் பாக்லே விடம் தந்திருந்த மலையக அபிலாசைகள் ஆவணம் தொடர்பில் இன்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் விளக்கம் அளித்தார்.

நிலவரம்பற்ற சமூக சபை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலதிக விபரங்களை கேட்டு தெரிந்துக்கொண்டார். மேலும் 13ம் திருத்தம் மூலமாக உருவாக்கப்பட்டுள்ள மாகாணசபைகள் முழு நாட்டுக்கும் உரித்தான அதிகார பரவலாக்கல் இயந்திரம் என்பது வலியுறுத்தப்பட்டது.

நாடு முழுக்க சிதறி வாழும் அனைத்து மலையக மக்களை கூட்டிணைக்கும் அதிகார பரவலாக்கல் இயந்திரமாக நிலவரம் பற்ற சமூக சபை செயற்படுவதை தமிழ் முற்போக்கு கூட்டணி விரும்புகிறது என்பது இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எடுத்து கூறப்பட்டது.

புதிய அரசியலமைப்பு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குழுவிடம் இந்த யோசனை சமர்பிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

இந்திய தரப்பில் மலையக மக்களுக்கு, குறிப்பாக தோட்ட தொழிலாளர்களுக்கு கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், வீடமைப்பு ஆகிய துறைகளில் உதவிகளை இன்னமும் விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது.

உலகளாவிய ரீதியில் இந்திய வம்சாவளி மக்கள் கூட்டிணைக்கப்படும் செயற்பாடுகளில் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களை இன்னமும் முழுமையாக இணைத்துக்கொள்வது பற்றி வெளிவிவகார அமைச்சர் உறுதியளித்தார்.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின் போது முழு பட்டினியில் இருந்து இலங்கை மக்கள் இந்திய உதவியினால் காப்பாற்றப்பட்டுள்ளனர். நன்றி.

அதேவேளை நாட்டு மக்களுக்கு உணவளிக்க முடியாத அவமானத்தில் இருந்து இந்நாட்டு அரசாங்கமும் தற்காலிமாக காப்பாற்றப்பட்டுவிட்டது. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்க முடியாது.

தொடர்ந்து வெளியில் இருந்து உணவு வர முடியாதே. நாம் எமக்குள் விரைவில் இவற்றுக்கு தீர்வு காணுவோம் என கூட்டணி தலைவர் மனோ கணேசன் வெளிவிவகார அமைச்சருக்கு மேலும் விளக்கம் அளித்தார். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மயிலம்பாவெளியில் மனைவி தூக்கிட்டதனை

என்பவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வயிறு, வருமானம் குறித்து மட்டுமே நாட்டு

பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டு மக்களுக்கு அரசு தடுப்பூசிகளை வழங்கியது.

அதனால்தான் இன்று எவ்வித அச்சுறுத்தலும் இன்றி போராட்டங்களை நடத்தமுடிகின்றது. இதற்கு காரணம் அரசுதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் தற்போது சிக்கல் ஏற்பட்டுள்ளமை உண்மைதான். அதற்காக மக்களிடம் மன்னிப்பு கோருகின்றேன். ஏப்ரல் முதலாம் திகதிக்குள் சமையல் எரிவாயு பிரச்சினை தீர்ந்துவிடும். அதன்பின்னர் எரிபொருள் பிரச்சினையும் தீரும்.

தற்போதைய நிலைமை என்பது தற்காலிகமானது, எனவே, வயிறு மற்றும் வருமானம் குறித்து மட்டும் மக்கள் சிந்திக்கக்கூடாது. எனத் தெரிவித்துள்ளார்.

## இன்று முதல் ஏழுரை மணி நேர மின் வெட்டு

முதல் மாலை 05.30 வரை 5 மணி நேரம் மற்றும் மாலை 5.30 முதல் இரவு 11.00 மணி வரை 2 மணி 15 நிமிடங்கள் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது

## ரணிலை பிரதமராக நியமிக்கும் எண்ணமில்லை

பதவியில் உள்ள நிலையில் புதிய பிரதமரை நியமிக்கவேண்டிய அவசியம் இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்கும்

அதுவும் முடியாமல் போனது. நிச்சயம் நாம் நெருக்கடி நிலையில் இருந்து மீண்டெழுவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், முன்னாள் அமைச்சர்களான விமல், கம்மன்பில போன்றவர்களே அரசாங்கத்தினை பயணத்தை குழப்பினர் எனவும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன குற்றம் சுமத்தியுள்ளனர்.

## பிரதமராகிறார் ரணில்?

முன்னாள் பிரதமரே தேசத்தின் பாதுகாவலனாக வருவார் என கருதுகின்றேன் என தெரிவித்துள்ள அவர் இலங்கைக்கு 1999இல் ரஸ்யா மேற்கொண்டஅரசியல் சீர்திருத்தம் போன்றதொன்றே அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

அவ்வேளை ரஸ்யாவில் ஜனாதிபதி பொறிஸ் யெல்ட்சின் பிரதமராக விளாடிமிர் புட்டினை நியமித்தார்,புட்டின் பின்னர் வெற்றிகரமாக நாட்டின் தலைவரானார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில அரசியல் தலைவர்கள் தற்போதைய ஆட்சியாளர்கள் தங்களிடம் ஆட்சியை ஒப்படைக்கவேண்டும் நாங்கள் செய்துகாட்டுவோம் என்கின்றனர் ஆனால் முதலில் அவர்கள் தங்களை நிரூபிக்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெகு விரைவிலே வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அடையாளம் இல்லாமல் போய்விடும்

## பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன்

(சுமன்)

தற்போது அரசாங்கம் செல்லும் நிலையைப் பார்த்தால் வெகு விரைவிலே வடக்கு கிழக்கு மாகாண மக்களின் அடையாளம் இல்லாமல் போய்விடும். பல இடங்களிலும் அந்த அடையாளங்களை நீக்குவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றன என யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு தாளங்குடா பிரதான வீதியில் வெண்மதி கைத்தறி ஆடை உற்;பத்தி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,





எங்களுக்குள் ஒரு பொதுவான கருத்து இருக்கின்றது. வடக்கு கிழக்கு மக்கள் வேற்றுமைப்படக்கூடாது தங்களுக்குள் ஒருமித்து செயலாற்ற வேண்டும். நாங்கள் வடகிழக்குத் தமிழ் மக்கள் என்ற ரீதியில் எங்களுக்குள் அந்நியோன்யம் வரவேண்டும் என்ற வகையில் வட மாகாண மக்களுக்கு எவ்வாறான செயன்முறைகளைச் செயற்படுத்தி வருகின்றோமோ அதேபோல் கிழக்கு மாகாண உறவுகளுக்கும் எம்மாலான செயற்திட்டங்களை வகுத்து செயற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலே வெளிநாட்டு உறவுகளின் பணஉதவியோடு சில நடவடிக்கைகைளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்தச் செயற்பாடு அரசியல் ரீதியானதல்ல, தமிழ் மக்கள் சார்பானது. எமது மக்களின் வருங்காலம் பற்றிய சிந்தனையின் வாயிலாக ஏற்பட்ட நிகழ்வு. ஏனெனில் அரசியல் என்று வரும் போது எமக்கான வாக்காளர்கள் வட மாகாணத்தில் தான் இருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் வடக்கு என்று நில்லாது எமது மக்கள் எங்கிருந்தாலும் தமிழ் மக்கள் என்ற ரீதியில் எங்களிடம் ஒரு உறவுமுறை இருக்கின்றது. அதன் அடிப்படையில் நாங்கள் சில நடவடிக்கைளை எடுக்க வேண்டி நிலை வந்திருக்கிறது.

தற்போது அரசாங்கம் செல்லும் நிலையைப் பார்த்தால் வெகு விரைவிலே வடக்கு கிழக்கு மாகாண மக்களின் அடையாளம் இல்லாமல் போய்விடும். பல இடங்களிலும் அந்த அடையாளங்களை நீக்குவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றன. பௌத்த வணக்கஸ்த்தலங்கள், எமக்கு அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் அனுப்பப்படுத்தல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது வருங்காலத்திலே வடக்கு கிழக்கு மக்களின் நிலை எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற பயம் பீடித்திருக்கின்றது. அதே நேரம் இங்கிருக்கும் தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள் சம்மந்தமாகவும் எங்களுக்குள் பலவிதமான பிரச்சனை இருப்பதை நாங்கள் உணர்கின்றோம். இவ்வாறான பிரச்சனைகளில் இருந்து எமது மக்களை நாங்கள் காப்பாற்ற வேண்டடுமாக இருந்தால் எமது செயற்திட்;ங்கள் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். அந்த அவசியத்தின் நிமித்தம் தான் இவ்வாறான செயற்திட்டங்களை வகுத்து அதற்கான நிதிகளைப் பெற்ற எமது மக்களுக்குக் கொடுத்து வருகின்றோம்.

இவ்வாறான சுயதொழில், கைத்தொழில் நடவடிக்கைகளில் எமது இளம் சமுதாயம் ஈடுபடுவதற்கான நடவடிக்களையும் நாங்கள் மேற்கொள்ள வேண்டும். அதனைச் சிறிது சிறிதாக ஆரம்பிக்க வேண்டும். வருங்காலத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் கைத்தொழில் மையங்கள் இருக்கக் கூடிய விதத்தில் நிலைமையை உருவாக்க வேண்டும்.

எமது கட்சியைப் பெருத்தளவில் தன்னாட்சி, தட்சார்பு, தன்நிறைவு எனும் முக்கிய மூன்று குறிக்கோள்கள் இருக்கின்றன. தன்னாட்சி என்பது அசியல் ரீதியானது. ஆனால் எமது குடும்பங்கள் எமது வாழ்க்கை என்ற ரீதியில் தட்சார்பினை நாங்கள் நாட வேண்டும். நாங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கூறிய விடயங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது மரக்கறிகளிலன விலை மூன்று நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. அப்போது வீட்டுத் தோட்டம் அமைக்க எமது வடமாகாண மக்களுக்கு அறிவறுத்தியிருந்தோம். இப்படியொரு நிலை வரும் என்று நினைக்கவில்லை ஆனால் தமிழ் மக்கள் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் தட்சார்பு நிலையினை அடைய வேண்டும் என்பதற்காகவே நாங்கள் சொல்லியிருந்தோம்.

தற்போது வீட்டுத்தோட்ட செயற்பாடு பல இடங்களிலும் ஆரம்பிக்கப்படுகின்றன. அதே போன்று கிழக்கு மாகாணத்திலும் இவ்வாறான கைத்தறி செயற்பாட்டினை விரிவுபடுத்த வேண்டும். இதன் மூலம் எமது மக்கள் தங்களின் தேவைகளையாவது பூர்த்தி செய்யக் கூடிய நிலைமை உருவாகும் அதற்காகத் தான் எமது வெளிநாட்டு உறவுகள் ஊடாக நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாங்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

எங்களின் விஜயத்தின் போது எமது மக்கள் பல கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். அதனை முடிந்தவரை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். நாங்கள் அரசாங்கமும் அல்ல, இந்த மாகாணத்திற்கு உரியவர்களும் அல்ல. ஆனால் கிழக்கு மாகாணம் என்பது எங்களுக்கு பிற மாகாணமோ, அந்நிய மகாணமோ அல்ல. தமிழ் மக்களைக் கொண்டிருக்கும் இந்த மாகாணத்தின் விடிவு இந்த மாகாணத்தின் நன்மை தீமைகளில் நாங்களும் பங்குபற்ற வேண்டிய கடமை எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது. அந்த நிலையிலே சிந்தித்து எமது மக்களுக்குரிய சுயதொழில் நடவடிக்;கை முயற்சிகளுக்கு எங்களால் இயலுமான உதவிகளைச் செய்வோம்.

அதற்கேற்றவாறு எமது மக்களும் ஒவ்வொரு விடயங்களிலும் தட்சார்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்க வேண்டும். எந்தவிதத்திலாவது எமது கல்வி நிலை மேம்பட வேண்டிய ஒரு அவசியம் இருக்கின்றது. முக்கியமாகத் தமிழ் பெண்கள் கல்வி நிலையில் மிகவும் மேம்பட வேண்டி அத்தியாவசியம் இருக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு நல்ல கல்வி நிலை இருந்தால் அந்த சமூகத்திற்கே ஒரு நல்ல நிலை கிடைக்கும். எனவே பெண் கல்வி மிகவும் முக்கியமானதொன்று.

எனவே இவ்வாறான உதவிகள்செய்வதற்கு நாங்கள் காத்துக்கொண்டிருக்கின்றோம். மக்களும் எங்களிடம்பெறும் உதவிகளை நல்ல விதத்திலே செயற்படுத்தி அனைவருக்கும் நன்மையைப் பெற்றுத் தரக் கூடிய விதத்திலே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

# வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் ஏப்ரல் 2 இல் திருகோணமலையில் கராட்டே பலப்பரீட்சை




( அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாண கராட்டே சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையிலான கராட்டே சுற்றுப் போட்டி ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை மக்கெய்ஸர் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இதில் 14 வயதிற்கு மேற்பட்ட , 16 வயதுக்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட , 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட , 21 வயதிற்கு மேற்பட்ட வயதுப்பிரிவுகளில் பெல்ட் மற்றும் கிலோ அடிப்படையிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

1999 வரை இச் சுற்றுப்போட்டியில் இணைந்த வடகிழக்கு மாகாண அணியாக கலந்து கொண்ட மேற்படி இரு மாகாணங்களும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் அரசியல் காரணங்களினால் வடக்கு மாகாணம் தனியாகவும் கிழக்கு மாகாணம் தனியாகவும் போட்டிகளில் ஈடுபட்டு வந்தன.

பழைய உறவுகளை மீண்டும் புதுப்பிக்கும் வகையிலும் இச்சுற்றுப் போட்டி அமையப் பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண கராட்டே சம்மேளனத் தலைவர் ஏ.ஆர் முஹம்மட் இக்பால் தெரிவித்தார்.




# ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைகுரலான அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தல் பேருரை

( வாஸ் கூஞ்ஞ)

சமூக சம நீதிக்காய் தமிழ் தேசிய அறவுணர்வுடன் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைக் குரலாய் பல சவால்களுக்கு மத்தியிலும் இன மானவுணர்வுடன் இன விடுதலைக்காய் அறப்பணி புரிந்த முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் அமரர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஓராண்டு நினைவேந்தலை முன்னிட்ட ஆண்டகையின் நினைவு பேருரை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற இருக்கும் அமரர் கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் இவ் பேருரை எதிர்வரும் 02.04.2022 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற இருக்கின்றது.

இவ் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை



மட்டக்களப்பு திருமலை ஓய்வுநிலை ஆயர் பேரருட் கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் கலந்துகொள்ள இருக்கின்றார்கள்.

அத்தோடு இவ் அரங்க அறிமுக உரையினை மனித உரிமை தொடர்பாக செயல்படும் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் வழங்கவுள்ளார்.

மேலும் நினைவு பேருரையாளர் தமிழ்த்தேசிய இருப்பில் அமரர் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் வகிப்பாகம் என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறை பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் உரையாற்றவுள்ளார்.

# திருமலை கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் விஜயம்





(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் ஆகியோர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

குறித்த விஜயத்தின்போது, வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் மற்றும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளை பார்வையிட்டதுடன், சிகிச்சை வழங்கப்படுகின்ற முறை தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதன் பின்னர், வைத்தியசாலையில் நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் மற்றும் குறித்த வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இந்த விஜயத்தை மேற்கொண்ட சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் ஆகியோரினால் மூலிகை மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாவட்டத்தில் 2022 ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை 27 புதிய காச நோயாளிகள் அடையாளம்

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் 2022 ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை 27 புதிய காச நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட சுவாச நோயியல் பிரிவின் வைத்தியர் சுரேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

காசநோய் தினத்தினை முன்னிட்டு திருகோணமலை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்: திருகோணமலை மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 27 புதிய காச நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடம் 2021ஆம் ஆண்டு 100 நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ள நிலையில் காச நோயாளிகளின் எண்ணிக்கை இவ் வருடம் அதிகரித்துள்ளது.

மேலும் சுவாச நோயினால் ஏற்படும் காச நோயானது திருகோணமலை மாவட்டத்தில் உப்புவெளி, கிண்ணியா, மூதூர் மற்றும் கோமரங்கடவல ஆகிய பிரதேசத்திலே அதிகளவான நோயாளிகள் இணங்காணப்பட்டுள்ளனர். காசநோயாளிகள் இனம் காணப்படுவதில் பெறும் சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவித்த வைத்தியர் சுரேஷ்குமார் காச நோயாளிகள் இருக்கும் இடத்தில் பரிசோதனைக்காக வைத்தியர் குழு சமூகமளிக்கும் நிலையில் நோயாளிகள் முன்வந்து காசநோய்க்கான நோய் அறிகுறிகளை சொல்லாத வரை நோயாளிகளை இனம் காண்பதில் தொடர்ந்தும் சிக்கல்கள் ஏற்படுவதாக தெரிவித்தார்.

காசநோய் தொடர்பான விழிப்புணர்வுகளை ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் மூலமாக தெளிவுபடுத்தும் இடத்தில் குறித்த காசநோயை இனங்கண்டு அதற்கான சிகிச்சையினையும் நோயாளிகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் இலகுவாக இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் திருகோணமலை பதவிசிறிபுர போன்ற பிரதேசத்தில் காசநோய் தினத்தை முன்னிட்டு பிரதேச ரீதியாக தெளிவுபடுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், இவ்வாறு காசநோயினால் பெரிதும் நோய் தாக்கத்திற்கு உள்ளாவது சிறுநீரக நோயாளிகள் மற்றும் சலரோக நோயாளிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

குறித்த காசநோயின் அறிகுறிகளாக இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், உடல் மெலிவு, பசியின்மை மற்றும் பிற்பகலின் பின்னர் ஏற்படுகின்ற காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் திருகோணமலை தள வைத்தியசாலையில் அமைந்துள்ள காசநோய் சிகிச்சை பிரிவில் இலகுவாகவும், இலவசமாகவும் சிகிச்சை பெற முடியும் எனவும், காச நோயானது முற்றுமுழுதாக குணப்படுத்தக் கூடிய நோயாக இருப்பதனால் சமூகத்தின் மத்தியில் எவ்வித அச்சமுமின்றி சிகிச்சை பெறுமாறும் காசநோய் தொடர்பான விழிப்புணர்வினை பெறுமாறும் இதன்போது வைத்தியர் சுரேஷ்குமார் கேட்டுக்கொண்டார்.

# நவநாதசித்தரின் குருபூஜையில் பறவைக்காவடி





(காரைதீவு நிருபர் சகா)

முப்பெரும் சித்தர்களுள் ஒருவரான நவநாத சித்தரின் குருபூஜை தினமான பங்குனி உத்திரத்தில் அவர் சமாதியடைந்த நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டத்து ஆலயத்தில் கொரோனாவுக்கு பின்பு குருபூஜை சிறப்பாக நடைபெற்றது.

குயின்ஸ்பேரி மக்களால் பறவக்காவடி ,பாற்காவடி ,பாற்குடம் எடுத்து, கட்டுப்பாடல்கள் அரோகரா கோசத்துடன் ஆலயம் நோக்கி வருகை தந்தனர்.

பின்னர் யாகபூசை பாலாபிசேகம். சமாதி குருபூஜையுடன் அன்னதானம் இடம்பெற்றது.

இதன் போது காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி சமாதி ஆலய பக்தர்களும் கலந்து சித்தரின் ஆசியை பெற்றனர்.

# நுவரேலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் கைது

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலவாக்கலை பொலிஸாரால் நேற்று முன் தினம் மாலை (27) கைது செய்யப்பட்டார்.

மது போதையில் கொட்டகலையிலிருந்து நுவரெலியா நோக்கி தனது உத்தியோக பூர்வ வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை வீதி போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த தலவாக்கலை போக்குவரத்து பொலிஸாரால் பிரதான வீதியில் சென்ற வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டபோது குறித்த நபர் செலுத்தி வந்த வாகனமும் பரிசோதிக்கப்பட்டபோது அவர் மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்தியமை பரிசோதனையின்போது கணடுபிடிக்கப்பட்டு அவர் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்முனையில் மயக்கமருந்து தேளித்து கோள்ளை!

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனையில் வீடொன்றிற்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களுக்கு மயக்க மருந்து தெளித்து கொள்ளையிட்ட சம்பவத்தில் மயங்கிய நிலையில் கல்முனை ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் வறுமை போன்ற காரணங்களால் அதிகமான திருட்டுச் சம்பவங்கள் பல பிரதேசங்களிலும் இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்றுமுன்தினம் இரவு கல்முனையில் ஒரு வீட்டினுள் ஒரு கொள்ளைச்சம்பவம் இடம்பெற்று இருக்கின்றது.

மயக்கம் வருவதற்கான திராவகம் தெளிக்கப்பட்டு இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சமயத்தில் வீட்டில் இருந்த நான்கு பேர் பாதிக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

# பிரதமரின் தலைமையில் கோழும்பில் நடைபெற்ற பங்களாதேஷின் 51வது சுதந்திரதினக் கோண்டாட்டம்



(வாஸ் கூஞ்ஞ)

இலங்கையிலுள்ள பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பங்களாதேஷின் 51வது சுதந்திர மற்றும் தேசிய தின நிகழ்வுகள் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் சனிக்கிழமை (26) கொழும்பு கோலஂ%;பேஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம் அவர்களின் அழைப்பின் பேரில்இ கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி. ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை நிறுவி 50 ஆண்டுகள் பூர்த்தியாவதோடு. அது இந்நிகழ்வுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் முகமாக அமையப்பெற்றிருந்தது என தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தன, அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எஸ்.பி.திஸாநாயக்க, இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் மொஹமட் ஆரிபுல் இஸ்லாம், இராஜாங்க அமைச்சரான தாரக பாலசூரியஇ வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள்,அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காத்தான்குடியில் பெண்கள் காப்பகத்திற்கான நிரந்தர கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டி வைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடியில் பெண்கள் காப்பகத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று (26) சனிக்கிழமை காத்தான்குடி முதியோர் இல்ல வளாகத்தில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட, பராமரிப்பு அற்ற கைவிடப்பட்ட சிறுமிகள், பெண்கள் மற்றும் வயோதிப முஸ்லிம் பெண்களுக்கான பாதுகாப்பு,பராமரிப்பு என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு கடந்த மூன்று வருடங்களாக தற்காலிக கட்டிடத்தில் இயங்கி வரும் பெண்கள் காப்பகத்திற்க்கான நிரந்தர கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பெண்கள்காப்பகத்தின்தலைவியும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான சல்மா அமீர் ஹம்சா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயஸ்ரீதர், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர், முதியோர் இல்ல பொறுப்பாளர் ஒய்வு பெற்ற அதிபர் கே.எம்.ஏ அஸீஸ் காத்தான்குடி இமாஸா குழுமம் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.ஜி.அஜ்வத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டதுடன் உலமாக்கள்,பிரமுகர்கள், என பலரும் கலந்துகொண்டு கொண்டனர்.

இந்தக் கட்டிடத்தின் ஆரம்ப கட்டத்துக்கு காத்தான்குடி இமாஸா குழுமம் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.ஜி.அஜ்வத் நிதியுதவி வழங்கியுள்ளதாக பெண்கள் காப்பகத்தின் தலைவியும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான சல்மா அமீர் ஹம்சா. தெரிவித்தார்.

# ஒஸ்கார் நடாத்திய சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130 வது ஜனன தினம்!

(காரைதீவு நிருபர் சகா)



உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130வது ஜனனதினத்தை முன்னிட்டு அவர் பிறந்த காரைதீவு மண்ணில் ‘ ஒஸ்கார்’ ( AUSKAR) (அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்) சுவாமி விபுலாநந்தர் நினைவுப்பேருரையுடன்கூடிய பரிசளிப்புவிழாவை நேற்றுமுன்தினம் ஞாயிறன்று(27) காரைதீவு விபுலாநந்த மணி மண்டபத்தில் நடாத்தினர்.

சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் திருமுன்னிலைஅதிதியாக இ.கி.மிசன் மட்டு.மாநில மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ மஹராஜ் கலந்து சிறப்பித்தனர்.

‘தமிழ்க்கல்வியும் தமிழில் கல்வியும்’ என்ற மகுடத்தில் சுவாமி தொடர்பான நினைவுப் பேருரையை கிழக்கு பல்கலைக் கழக ஒய்வுநிலை பேராசிரியர் சி.மௌனகுரு காணொளி மூலம் நிகழ்த்தினார்.

கௌரவஅதிதிகளாக காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் சிறப்பு அதிதிகளாக பணிமன்ற தலைவர் வி.ஜெயநாதன் கோட்ட கல்வி பணிப்பாளர் ஜே.டேவிட் ஆலய ஒன்றிய தலைவர் இ.குணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுவாமியின் 130வது ஜனனதினத்தையொட்டி ஒஸ்கார் அமைப்பினர் ஏலவே காரைதீவுக்கோட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு கட்டுரை சித்திரம் பாவோதல் ஆகிய தமிழ் இலக்கிய ஆக்கத்திறன் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியிருந்தனர். போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்க்கான பெறுமதிமிக்க பணப்பரிசுகள் நினைவு சின்னங்கள் வழங்கப்பட்டன.

இதற்காக ஒத்துழைத்த ஒஸ்கார் சர்வதேச இலங்கை மற்றும் காரைதீவு குழுவினருக்கு நன்றிகள் என அவுஸ்திரேலியாவிலிருந்து ஒஸ்கார் செயலாளர்அ.மகேந்திரன்(கட்டடக் கலை நிபுணர்) தெரிவித்தார்.



கல்முனை கடற்கரைப் பள்ளி வாசலை அண்டியுள்ள பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்படுவதால் பெரும் திரளானோர் திரண்டுள்ளனர். இந்த பிரதேசத்தில் இவ்வாரம் முதல் இவ்வாறான எரிவாயு சிலிண்டர் பெறுவதற்கு மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

# தமிழக சட்டப்பேரவையில் அறிவித்ததுபோல் ஒன்றிய அரசின் மூலமாக இலங்கையில் இருக்கும் தமிழர்களின் வாழ்விலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும்

(வாஸ் கூஞ்ஞ)

தமிழ்நாடு வரும் ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு விரைவில் விடிவுகாலம் ஏற்படுத்தி தரும்’ என்று தமிழக சட்டப்பேரவையில் அறிவித்ததுபோல் ஒன்றிய அரசின் மூலமாக இலங்கையில் இருக்கும் தமிழர்களின் வாழ்விலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தி ஈழத்தமிழர்களின் நீண்ட கால கனவையும் நாடோடிகளாக அலைக்களிப்புக்கு உள்ளாவதை மேலும் அனுமதிக்காமலும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டும் என்று மறுவாழ்வு முகாம் மக்கள் தமிழ்நாடு முதல்வருக்கு இவ்வாறு தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்

தமிழ்நாட்டில் வாழும் தமிழகம் வாழ் மறுவாழ்வு முகாம் இலங்கைத் தமிழர்கள் தமிழக முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடித்தத்தில் தெரிவித்திருப்பதாவது;

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தமிழகத்தில் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் சார்பாக அன்பு கலந்த வணக்கங்கள்.

‘கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது என்றால் கடல் கடந்து வாழும் தமிழர்களின் கண்ணீரால்’ என்று அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வரிகளை நினைவூட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் கடல் கடந்து வந்த இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணீரைத் துடைக்கக்கூடிய வகையில் சட்டப்பேரவை விதி எண். 110இன்கீழ் 27.8.2021 அன்று ரூ.317.4 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டங்களை தமிழக முதலவர்வராகிய நீங்கள் வெளியிட்டு இருந்தீர்கள்.

தமிழக மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கையை இத்திட்டங்கள் மேம்படுதிவரும் இந்தச் சூழலில் கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை காரணமாக தற்போது இலங்கையில் நிகழும் பொருளாதார நெருக்கடிகளும் அதனைத் தொடர்ந்து தமிழ்மக்கள் சந்தித்துவரும் இன்னல்களும் மாபெரும் பேரவலம் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

1970 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்க ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த பஞ்சத்தைவிட இது மிகப்பெரும் அவலம் என்றும் கூறுகிறார்கள்.

இதனால் அரிசி பருப்பு காய்கறி பால் அத்தியாவசிய பொருட்களின் விலை பல மடங்கு இலங்கையில் அதிகரித்து உள்ளது. இதனால் பொருட்களை வாங்க இயலாமல் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகி தமிழர்கள் கடல் வழியாக தமிழகத்திற்கு வரத் தொடங்கியுள்ளனர்.

போர்ச் சூழலையும் தாண்டி பட்டினிச் சாவுக்கு அஞ்சி தங்கள் குடும்பங்களோடு வரும் அனைத்து தமிழர்களையும் தமிழக கடலோர காவல் படை கைது செய்து நடவடிக்கை எடுக்காமல் மணல் திட்டில் சிக்கித் தவிப்போரையும் பாதுகாப்போடு அழைத்து வருவதும் தனுஸ்கோடி வந்தடையும் தமிழர்களை வரவேற்று மனிதாபிமானத்தோடு அவர்களுக்கு உதவிகளை செய்து வருவதும் எமக்கு நெகிழ்ச்சி அடைய வைக்கிறது. 24,03,2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் பேசிய தாங்கள் ‘இலங்கையில் இருந்து தமிழ்நாடு வரும் ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு விரைவில் விடிவுகாலம் ஏற்படுத்தி தரும் என்றும் ஈழத்தமிழர்களின் விவகாரம் தொடர்பாக மத்திய அரசிடம் பேசி வருவதாகவும் சட்டப்பேரவையில் தெரிவித்து இருப்பது அனைவரிடமும் மிகுந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது. உயிர் காக்க எப்போதெல்லாம இலங்கைத் தமிழர்கள் கடல்கடந்து தமிழகம் வருகிறார்களோ அப்போதெல்லாம் அனைவரையும் தாயுள்ளத்தோடு வரவேற்று அனைத்து விதமான வாழ்வாதார உதவிகளையும் செய்துவரும் தமிழ்நாடு அரசு தற்போது பஞ்சத்தால் உயிர்காக்க வருபவர்களையும் வரவேற்று தேவையான மனிதாபிமான நடவடிக்கைகளை எடுத்து வருவதற்கு தமிழக மறுவாழ்வு முகாம் மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

தாங்கள் ‘இலங்கையில் இருந்து தமிழ்நாடு வரும் ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு விரைவில் விடிவுகாலம் ஏற்படுத்தி தரும் என்றும் ஈழத்தமிழர்களின் விவகாரம் தொடர்பாக மத்திய அரசிடம் பேசி வருவதாகவும் சட்டப்பேரவையில் தெரிவித்து இருப்பது அனைவரிடமும் மிகுந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது. மனிதாபிமான நடவடிக்கைகளை எடுத்து வருவதற்கு தமிழக மறுவாழ்வு முகாம் மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்

‘இலங்கையில் இருந்து தமிழ்நாடு வரும் ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாடு அரசு விரைவில் விடிவுகாலம் ஏற்படுத்தி தரும்’ என்று தமிழக சட்டப்பேரவையில் அறிவித்து உள்ளதுபோல் ஒன்றிய அரசின் மூலமாக இலங்கையில் இருக்கும் தமிழர்களின் வாழ்விலும் ஒரு நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தி ஈழத்தமிழர்களின் நீண்ட கால கனவையும்இ நாடோடிகளாக அலைக்களிப்புக்கு உள்ளாவதை மேலும் அனுமதிக்காமலும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டும் என்று அனைவரின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் எனவும் இவ் மறுவாழ்வு முகாம் மக்கள் இவ்வாறு தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்

இவ் கடிதத்தின் பிரதிகள் அமைச்சர் திரு.செஞ்சி மஸ்தான் அவர்களுக்கும் சென்னை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களுக்கும் சென்னை எழிலகம் மறுவாழ்வுத்துறை ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# ரணில் விக்ரமசிங்க ஆலோசனை சொல்லும் அளவிற்கு நாட்டின் பொருளாதார நிலைமை மாறிவிட்டது

(பாறுக் ஷிஹான்)



உணவுப்பஞ்சத்தில் இருந்து எமது நாட்டை அவசரமாக எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(27) மாலை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது .ரணில் விக்ரமசிங்க ஆலோசனை சொல்லும் அளவிற்கு நாட்டின் பொருளாதார நிலைமை மாறிவிட்டது.ஏனெனில் ரணிலின் ஆட்சியில் தானே எமக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டன.அவருக்கு நெல்லு மரத்தை(அரிசி) தெரியாது.எனவே இனவாதத்தை வைத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது.உணவுப்பஞ்சத்தில் இருந்து எமது நாட்டை அவசரமாக எவ்வாறு பாதுகாக்க முடியும் என்பதை மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்றார்.

# திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிய ஆலயத்திற்கான திருச்சுற்று மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு





(திருக்கோவில் நிருபர்எஸ் கார்த்திகேசு)

திருக்கோவில் வரலாற்று பழைமை வாய்ந்த ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமிய ஆலயத்திற்கான திருச்சுற்று மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு.

கிழக்கிலங்கை வரலாற்று பழைமையும் பெருமையும் பெற்று விளங்கும் அருள்மிகு திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிய ஆலயத்திற்கான திருச் சுற்றுக் மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று ஆலயத்தில் இடம்பெற்று இருந்தன.

இந்நிகழ்வானது ஆலய தலைவர் எஸ்.சுரேஸ் தலைமையில் இன்று திங்கட்கிழமை ஆலய வடக்கு திசையில் சுபவேளையில் இடம் பெற்று இருந்தன.

இதன்போது ஆலய குரு சிவஸ்ரீ நீதிநாதர் அங்குசநாதக் குருக்கள் அவர்களினால் மூலமூர்த்தியான முருகப் பெருமானுக்கு பூஜைகள் இடம்பெற்று தொடர்ந்து புனித கல்லானது ஆலயத்தை சுற்றி கொண்டு வரப்பட்டு பூமி பூஜைகள் என்பன இடம்பெற்று இருந்தன.

இதனைத் தொடர்ந்து ஆலய குருவினால் முதலில் கல் நடப்பட்டதைத் தொடர்ந்து ஆலய வண்ணக்கர் நிருவாகிகள் மற்றும் அதிதிகளால் திருச்சுற்று மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்று இருந்தன.

இந்நிகழ்வில் ஆலய வண்ணக்கர் வ.ஜயந்தன் திருக்கோவில் பிரதேசசபை தவிசாளர் இ.வி.கமலராஜன் சபை உறுப்பினர் எஸ்.சசிகுமார் ஆலய மற்றும் ஆச்சாரியார் ஸ்தபதி எம்.குமார் திருஞானவாணி முத்தமிழ் இசை மன்ற தலைவர் ஏ.கணேசமூர்த்தி வட்டாரப் பிரதி நிதிகள் ஆலய நிருவாகிகள் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.




# கோரக்கர் சித்தருக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு





(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கோரக்கர் சித்தருக்கு அநாவர்த்தன மஹா கும்பாபிஷேத்திற்கான எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்றது.

நேற்று(28) காலை 7.15மணி தொடக்கம் 7.35மணிவரையுள்ள சுபவேளையில் கோரக்கர் சித்தருக்கும் லிங்கமூர்த்திக்கும் ரிஷபத்திற்கும் மஹாகும்பாபிசேகம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் (27) எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இக்கோரக்கர் சித்தர் பீடத்தை அவுஸ்திரேலிய சிவனருள் அறக்கட்டளை நிறுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த சைக்கிள் ஓட்டப் போட்டியும் வீதி ஓட்டப்போட்டியும்





(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா ரீபப்லிக்கன் சர்வதேச ஆங்கில பாடசாலையின் வருடாந்த சைக்கிள் ஓட்டப் போட்டியும் வீதி ஓட்டப் போட்டியும் நேற்று (28) திங்கட்கிழமை நுவரெலியா நகரில் நடைபெற்றது.

வயதெல்லை அடிப்படையில் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாடசாலையின் அதிபர் நீல் ரொஹான் சுபசிங்க, பாடசாலையின் நிர்வாக இயக்குனர் ஏ.டி. மறியசூசை ,மற்றும் இயக்குனர்காளான வி. விஜயகுமார், திருமதி சுபா மலர்வண்ணன், இராஜபாலன் சனார்த்தன் ஆகியோர் கலந்துக்கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கினார்கள்.



கந்தளாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற கந்தளாய் பரமேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுடன் நிற்பதை காணலாம்.

படம்:எப்.முபாரக்

### எல்லை இன்றி விலை அதிகரிக்கும் ஐ.ஓ.சி நிறுவனம்:

# சட்டத்திற்கு முரணானதாக இருந்தால் விலை குறைக்க நடவடிக்கை





**(ரவ்பீக் பாயிஸ் )**

ஐ.ஓ.சி நிறுவனமானது எரிபொருளின் விலைகளை அனாவசிய முறையில் அதிகரித்து செல்வதாக தமக்கு அறிவித்தல்கள் வந்துள்ளதாகவும் அவ்வாறு அதிகரிக்கப்பட்ட விலை உயர்வுகள் சட்டத்திற்கு முரணானதாக இருந்தால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவ்வாறு உயர்த்தப்பட்ட எரிபொருட்களின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் என்ற வகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் சுற்றாடல் துறை மற்றும் மின்சாரம் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்

திருகோணமலை கன்னியா இலுப்பங்குளம் வீதியில் சட்டவிரோதமாக க்ரேவல் அகழ்வு மேற்கொண்டு எவ்விதமான புனரமைப்பும் இல்லாத நிலையில் கைவிடப்பட்ட 25 ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு (27) திருகோணமலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில் ;

இப் பிரதேசத்தில் சட்டவிரோத அகழ்வினால் குறித்த பிரதேசம் எந்த ஒரு அபிவிருத்தியும் இல்லாமல் காணப்படுவதாகவும் குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு நிலத்தினை சமாந்தரமாக வெட்டப்பட்டு வன பிரதேசத்திற்கு சொந்தமான குறித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்

மேலும் சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்படவிருக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையத்தினை இந்திய நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கு தீர்மானிக் உள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு

சம்பூர் பிரதேசத்தில் காற்றாடி மட்டும் சூரிய மின்கலத்தின் ஊடாக மின் உற்பத்தியினை பெரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இவ்வாறான வேலைத்திட்டங்கள் நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுத்து வருவதாகவும் இதுவரை எந்த ஒரு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்வதற்கான எந்த ஒரு ஒப்பந்தமும் கைச்சாத்துபடவில்லை எனவும் சுற்றாடல் துறை மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார் மேலும் இலங்கை மின்சார தனியார் நிறுவனம் கடந்த காலங்களில் பெரும் அளவிலான இலாபம் ஈட்டுவதாகவும் இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்குவதாகவும் வெளிவருகின்ற கருத்துக்களில் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு இலங்கை மின்சார சபைக்குள் சில கட்டுப்பாடுகள், அளவுக்கு அதிகமான ஊழியர்கள் போன்ற பல பிரச்சனைகள் இருக்க முடியும் மேலும் மின்சார சபை ஒன்றியத்தினர் மேற்கொள்ளும் சில முரண்பாடான செயற்பாடுகளும் இவ்வாறு மின்சார சபை நட்டத்தில் இயங்குவதற்கான காரணமாகவும் இருக்கலாம் என சுற்றாடல் துறை மற்றும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர், திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது .

# பிரமாண்டமான சைவ சமய தீட்சை வழங்கும் விழா





**(காரைதீவு சகா)**

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, இலங்கை சைவநெறிக் கழகம், இலங்கை சைவநெறி தொண்டர் கழகம் இணைந்து இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு சைவ சமய தீட்சை வழங்கும் சிவபுண்ணிய நிகழ்வானது அம்பாறை சம்மாந்துறை பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வளத்தாப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

ஆறுமுகநாவலர் சபையின் பொதுச்செயலாளரும் இலங்கை சைவ நெறிக்கழக த்தலைவருமான வைத்தியர் ஈசான தேசிகர் சிவஸ்ரீ தி.பிரதாபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தீட்சை வழங்குவதற்காக ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு கிரியா திலகம் சைவ வித்தகர் சிவஸ்ரீசச்சிதானந்தசிவம் குருக்கள் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கை சைவநெறிக்கழக பொதுச்செயலாளர் வெல்லாவெளி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளருமான வி.துலாஞ்சனன், சைவநெறி தொண்டர் கழக தலைவர் சி.வினோதரூபன், பிரதித்தலைவர் செல்வி உதயகௌரி மற்றும் சம்மாந்துறை பிரதேச ஒன்றிய ஆலயங்களின் செயலாளர் சு.காந்தன்,

பிரதேச ஆலயதர்மகர்த்தாக்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை இந்து கலாசார மாவட்ட உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற கொண்டார்.

நிகழ்வில் அறநெறி மாணவர்கள் ஆலய நிருவாகிகள் அறங்காவலர் பலரும் கலந்து கொண்டு தீட்சை பெற்றனர்.

# குப்பைகளை தரம்பிரித்து சேகரிக்க கல்முனை மாநகர சபையினால் விசேட பைகள் அறிமுகம்




**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபை எல்லையினுள் குப்பைகளை தரம்பிரித்து சேகரிப்பதற்காக மாநகர சபையினால் விசேட பைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினருடனான விசேட கலந்துரையாடல் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (27) மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் மாநகர சபையின் சுகாதார நிலையியற் குழுவின் தவிசாளர் சட்டத்தரணி றொஷான் அக்தர், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக் உட்பட மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சமையலறைக் கழிவுகள், உணவுக் கழிவுகள், மரக்கறி, இலை, குலைகள் போன்ற உக்கக்கூடிய கழிவுகளை சேகரிப்பதற்காக பச்சை நிறப் பையும் இவை தவிர பிளாஸ்டிக், பொலித்தீன், டின்கள் மற்றும் உக்க முடியாத கழிவுகளை வேறாக சேகரிப்பதற்காக மஞ்சள் நிறப் பையும் என்ற அடிப்படையில் இரு நிறங்களிலான பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு பைகளையும் மாநகர சபையின் பழைய கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள சுகாதாரப் பிரிவு அலுவலகத்தில் மொத்தமாக 100 ரூபா பணம் செலுத்தி பொது மக்கள் கொள்வனவு செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது.

மீள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டிருக்கின்ற இப்பைகளிலேயே உக்கும் கழிவுகளை வேறாகவும் உக்காத கழிவுகளை வேறாகவும் சேகரித்து வைத்து, மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் வாகனங்கள் வருகின்ற வேளைகளில் உரிய கழிவுப்பையை மாத்திரம் ஒப்படைத்து விட்டு, அப்பையை மீளவும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் உரிய பைகளில் இட்டு கையளிக்கப்படாத குப்பைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது எனவும் கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் நாடு முழுவதும் திண்மக்கழிவுகளை தரம்பிரித்து சேகரிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் வருகையை எதிர்த்து போராடியவர்களுக்கு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் விசாரணை




**(த.சுபேசன்)**

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தமை விளம்பர பதாகையை எரித்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் இருவரை 24/03 வியாழக்கிழமை சாவகச்சேரி பொலிஸார் விசாரணைக்கு அழைத்திருந்தனர்.

சாவகச்சேரி பிரதேசசபையின் உபதவிசாளர் செ.மயூரன் மற்றும் வலி கிழக்கு பிரதேசசபை தவிசாளர் நிரோஸ் ஆகியோருக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அரசியல் கட்சி ஒன்றினை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர் ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒன்றரை மணி நேரம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபையின் உபதவிசாளர் மயூரன் கருத்துத் தெரிவிக்கையில்;

நான் மற்றும் வலி.கிழக்கு பிரதேசசபை தவிசாளர் ஆகிய இருவரும் பிரதமரின் வருகையை ஒட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை அழைத்து எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டோம் எனவும், பிரதமரின் வருகையை ஒட்டி அவரை வரவேற்கும் முகமாக காட்சிப்படுத்தப்பட்ட பதாகையை எரித்தோம் எனவும் எம் மீது ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சேர்ந்த நபர் ஒருவரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் விசாரணைக்காக அழைத்திருந்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய ஜனநாயக போராட்டத்தில் நாங்கள் பங்கெடுத்திருந்தோம். ஆனால் பதாகைகளை எரித்தது யார் என்று எமக்குத் தெரியாது. என பொலிஸாரிடம் வாக்குமூலம் பதிவு செய்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# உபதேச குழுக்களின் மூலம் போலிசார் பொதுமக்கள் நல்லுறுவு வலுப்பெறும்!

### காரைதீவில் கல்முனை உதவிபோலிஸ் அத்தியட்சகர் புத்திக

**(காரைதீவு நிருபர் சகா)**

சமுகத்தில் அவ்வப்போது எழும் குற்றச்செயல்களை தடுக்க பொலிசார் பொதுமக்கள் நல்லுறுவு அவசியம். அதற்கு இவ்வாறான உபதேசக்குழுக்கள் மேலும் வலுச்சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற மக்கள் பாதுகாப்பு உபதேசக்குழுவின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசிய கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.எல்.புத்திக தெரிவித்தார்.

காரைதீவுப்பொலீஸ் பிரதேசத்திற்கான மக்கள் பாதுகாப்பு உபதேசக்குழுவின் முதலாவது அங்குரார்பணக்கூட்டம் நேற்று காரைதீவு பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜகத் தலைமையில் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

மக்கள் சுதந்திரமாக நிம்மதியாக பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதற்காக பொலிசார் சேவையாற்றி வருகின்றனர். இருப்பினும் பொது மக்களின் ஒத்துழைப்பில்லாமல் அது 100வீதம் சாத்தியமாகாது. எனவே பொதுமக்கள் பொலிசார் உறவு முக்கியானது.

தலைக்கவசம் என்பது மனிதஉயிரைப்பாதுகாக்கும். மற்றது அது இலங்கைச்சட்டம். இருப்பினும் ஊருக்குள் சந்தர்ப்பசூழ்நிலைக்கேற்ப தலைக்கவசமில்லாமல் பயணிப்போரை அதன் பாதகநிலையை அறிவுறுத்தி வருகிறோம். குற்றத்தை எழுதி நீதிமன்றிற்கு அனுப்பி தண்டனை வழங்கி அரசாங்கத்திற்கு நிதி சேர்க்கவேண்டுமென்பதற்காக தலைக்கவசமில்லாதோரை பிடிப்பதில்லை. தங்கள் உயிர்ப்பாதுகாப்பில் பொலிசாருக்கும் பங்குண்டு என்ற கடமைஉணர்வில் அதனைச்செய்கிறோம். பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

காரைதீவுப்பிரதேசத்தில் இருகிராமசேவையாளர்பிரிவுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் வீதம் நியமித்துள்ளோம். அப்பிரிவிற்குள்வரும் அத்தனை விடயங்களுக்கும் அவர் பொறுப்பாகவிருப்பார். பொது மக்களின் ஒத்துழைப்பை பெரிதும் எதிர்பார்க்கிறோம். இந்த உபதேசக்குழு உறுப்பினர்களை நான் தொடர்ந்து காணவிரும்புகிறேன். என்றார்.

ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள், பள்ளிவாசல் தலைவர் , தேவாலயதலைவர் , தவிசாளர் கே.ஜெயசிறில் உள்ளிட்ட உபதேசக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பேராளர் மாநாடு





இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட பேராளர் மாநாடு சனிக்கிழமை 26 ஆம் திகதி மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரி யில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்குமாகாண இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை ஆசிரியர்சங்கத்தின் தலைவர் பிரியந்த பெனாண்டோ செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்குமாகாணத்தில் உள்ள பல கல்விவலயங்களில் இருந்து வருகைதந்து கலந்துகொண்டிருந்தனர்.

அதேவேளை கிழக்கில் சேவையினை மீறி வெற்றிடங்களை நிரப்புவதனை விடுத்து முறையான நியமனம் வழங்குதல், குளிர்சாதன அறைக்குள் இருந்து கதிரைகளை பாதுகாப்பதற்காக கல்வியைச் சீரிழக்காதே, கிழக்கில் முறையான மாகாணக் கல்விப்பணிப்பாளரை நியமித்தல் உட்பட 11 அம்சக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## துப்பாக்கி மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் திருமலையில் பெண்ணொருவர் கைது

(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமன்புர பிரதேசத்தில் கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக சீனக்குடா பொலிசார் தெரிவித்தனர்

சீனக்குடா இரகசியப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று (26) காலை குறித்த வீட்டை சோதனையிட்டபோது அனுமதிப் பத்திரம் இன்றி வைத்திருந்த கட்டுதுவக்கு ஒன்றும் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சீனக்குடா போலீசார் தெரிவித்தனர்

இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டில் இருந்து 33 வயதுடைய பெண்ணொருவரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளதாகவும் குறித்த பெண் வழங்கிய வாக்குமூலத்திற்க்கு அமைய கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் தனது தந்தையுடையது எனவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

மேலும் குறித்த பெண்ணின் தந்தை வீட்டில் இருக்கவில்லை எனவும் வேலை நிமிர்த்தம் கொழும்புக்குச் சென்று இருந்ததாகவும் குறித்த பெண் வாக்குமூலம் அளித்துள்ளார் .

இவ்வாறிருக்கையில் குறித்த பெண்ணின் தந்தையை சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சீன போலீசார் தெரிவித்தனர் .

மேலும் தம்வசம் அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கி வைத்திருந்தமை மற்றும் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் குறித்த பெண்ணை நாளைய தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிசார் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை கந்தளாயில் சமயல் எரிவாயுவை பெற நீண்ட வரிசையில் போது மக்கள்

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்கு இன்று காலை 10.00 மணி முதல் கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சமையல் எரிவாயு கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள எரிவாயு கடையில் வழங்கப்பட இருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே பொது மக்கள் அங்கு பி.ப 2.00 மணிவரை காத்திருந்தனர்.

சமையல் எரிவாயு வழங்கப்பட இருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவல்களை அடுத்து பொது மக்கள் கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையால் செல்லும் வீதி ஓரத்தில் சிலிண்டர்களை வரிசையாக அடுக்கி வைத்து 2.00 மணிவரையும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சமையல் எரிவாயு வழங்கப்படுவதற்குரிய ஏற்பாட்டை கந்தளாய் வர்த்தக சம்மேளனத்தினர் செய்தாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கு சிறுவர்கள், பெரியவர்கள், முதியோர்கள், ஆண்கள், பெண்கள் என பலரும் திரண்டு இருந்தனர்.

சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கு வருகை தந்த இரண்டு சிறுவர்கள் (சகோதரர்கள்) ஏமாற்றத்துடன் சிலிண்டரை தூக்க இயலாது ஆளுக்கொரு பக்கமாக நீண்ட நேரம் தூக்கிக் கொண்டு சென்றதை எம்மால் காணக் கூடியதாக இருந்தது.

## கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் நிமோஜனுக்கு பிரியாவிடை!



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நீண்ட காலமாக தனது மருத்துவ சேவையை செய்து தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் கதிரியக்கவியல் வைத்திய நிபுணர் டாக்டர் என்.நிமோஜனுக்கான பிரியாவிடை நிகழ்வு நடாத்தப்பட்டது.

இப் பிரியாவிடை நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் வைத்தியக் கலாநிதி இரா.முரளீஸ்வரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வைத்தியசாலையின் அனைத்து வைத்திய நிபுணர்கள் வைத்தியர்கள் மற்றும் சக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் அவர் ஆற்றிய சேவைகளும் அந்நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டதுடன் ஏனையவர்களும் அவருடன் இணைந்து சேவையாற்றிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

அவரை கௌரவிக்கும் முகமாக பொன்னாடை மற்றும் நினைவுச் சின்னம் வைத்திய அத்தியட்சகரினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

# அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் தேசியரீதியில் முதலாமிடம் இடம்பெற்ற வீரமுனை சுதர்சன்





(காரைதீவு சகா)

அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் தேசியரீதியில் வீரமுனையைச் சேர்ந்த அருளானந்தம் சுதர்சன் தமிழ்மொழி மூலமான படைப்பில் சிறுவராக்கப் பிரிவில் முதலாம் இடத்தினை பெற்றுச்சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு பி.எம்.ஐ.சி.எச்.இல் நடைபெற்ற தேசியவிருதுவழங்கும் விழாவில் அதற்கான விருது மற்றும் சான்றிதழ், காசோலை என்பன அவருக்கு வழங்கப்பட்டன.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2021ம் ஆண்டிற்கான அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற ஊழியர்களுக்கான விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது பிரதமர் மற்றும் புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் 2022.03.23 (புதன்கிழமை) கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (பெங்யட் மண்டபம்;) அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரசஊழியர்களின் சிறப்பான பங்குபற்றலுடன் வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதில் இலங்கையின் கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தேசபந்து பேராசிரியர் கபில குணவர்த்தன மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இவ் விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கவிதை, சிறுகதை, பாடலாக்கம், சிறுவராக்கம், சிதிரம், நாடகம் போன்ன போட்டித்துறைகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் முதலாமிடம் பெற்றவர்களுக்கான விருது மற்றும் சான்றிதழ்கள், காசோலைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இதில் அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் பலரும் கலந்து, சிறப்பித்திருந்தனர்.

இந் நிகழ்வில், தமிழ் மொழி மூலமான படைப்பில் சிறுவராக்கப்பிரிவில் முதலாம் இடத்தினை சம்மாந்துறை பிரதேச வீரமுனைப் பதியைச் சேர்ந்த அருளானந்தம் சுதர்சன் என்பவர் பெற்று அதற்கான விருது மற்றும் சான்றிதழ், காசோலை என்பனவற்றை பெற்றிருந்தார்.

அன்றைய தினம் இவரது முதலாமிடம் பெற்ற சிறுவர் கவி களைகலாசாரஅலுவல்கள் அமைச்சு நூலாக அச்சிட்டு அதனை இலங்கையின் பிரதமர் உட்பட கலந்து கொண்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்தாகும்.





ஏறாவூர் அல் ஹிபாஸ் பாலர் பாடசாலையின் விடுகை நிகழ்வும் புதிய மாணவர்கள் வரவேற்பும் ஆசிரியை றஸ்மினா இர்பான் தலைமையில் 27.03.2022 நடைபெற்றது. இந்நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்ஜி. நாஸர் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டு மாணவர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்குவதைப்படத்தில் காணலாம்.

## பேசாலையில் நீண்ட தினங்களுக்கு பிறகு சதோசவில் ஒரு கிலோ சீனியும் ஒரு அங்கர் பக்கட்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலை சதொச வியாபார நிலைய கிளைக்கு நீண்ட தினங்களுக்குப் பின் சீனி மற்றும் அங்கர் மா பக்கற் வந்ததும் திங்கள் கிழமை (28.03.2022) இவற்றை பெறுவதற்கு காலை முதல் மக்கள் முண்டியடித்துக் கொண்டு பெறுவதில் ஆர்வம் காட்டி வருவதை படத்தில் காணலாம். மணிக்கணக்கில் இவ் பொருளை பெறுவதற்கு நீண்ட கியூவில் நின்றபோதும் இவர்களுக்கு ஒரு கிலோ சீனியும் ஒரு அங்கர் பக்கற் மா மட்டுமே வழங்கப்பட்டது.

இனி இந்த பொருள் எத்தனை நாளைக்குப் பிறகு வருமோ என்ற கேள்வியில் நுகர்வோர் கேட்டுச் சென்றதும் கேட்கக் கூடியதாக இருந்தது .






# 'சேணேஹே தடாக' வீட்டை அடிப்படையாகக் கோண்ட பேற்றோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு- ௨0௨௨








(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

'செணேஹே தடாக' வீட்டை அடிப்படையாகக் கொண்ட பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கொன்று நேற்று (28) திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரன் அவர்களது தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் தொடர்பான தெளிவுபடுத்தலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், கிழக்கு பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடத்திற்கான சிரேஸ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி க. அருளானந்தம், கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்திற்கான விரிவுரையாளர் வைத்திய கலாநிதி வ.மயூரன், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் வீ.முரளிதரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் யோ.தனுசியா உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் பெற்றோர்களின் வகிபாகம் தொடர்பாக வைத்திய கலாநிதி க அருளானந்தம் அவர்களினால் பெற்றோர்களுக்கான விரிவுரையாற்றப்பட்டதுடன், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தியில் சுகாதாரம் மற்றும் பராமரிப்பு தொடர்பாக வைத்திய கலாநிதி வ.மயூரன் விரிவுரையாற்றியிருந்தார்.

அத்தோடு முன்பள்ளைப்பருவ அபிவிருத்தியின் முக்கியத்துவம், முன் பிள்ளைப்படுவ அபிவிருத்தியில் அழகியல் செயற்பாட்டின் முக்கியத்துவம் போன்ற விடையங்கள் தொடர்பாகவும் இதன்போது வளவாளர்களினால் பெற்றோர்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் டேங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த மார்ச்சு 12 ஆந் திகதி தொடக்கம் மார்ச்சு 18 ஆந் திகதிவரையான காலப்பகுதியில் 20 பேர் டெங்குநோய் தாக்கத்திற் குள்ளாகியுள்ளனர்.

இந்தவாரம் டெங்குதாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நோயாளர்களும், ஏறாவூர், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தலா இரு நோயாளர்களும், செங்கலடி, காத்தான்குடி, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளர்களுமாக மொத்தம் 20 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் செங்கலடி, வாழைச்சேனை, பட்டிப்பளை, வவுனதீவு, வாகரை, வெல்லவெளி, ஆரையம்பதி, கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.

மேலும் மட்டக்களப்புமாவட்டத்தில் இவ் வருடத்தில்; இதுவரை 165 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற் குட்பட்டுள்ளதாகவும் இதுவரை எவரும் மரணமடையவில்லை எனவும் பிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ. சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

இதேவேளை பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள் நீர்தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்குநுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காதவகையில் சூழலைதுப்பரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட தர வரிசையில் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னனியில்





(சில்மியா யூசுப்)

இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட தர வரிசையில் களுத்துறை தேசிய பாடசாலையான முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னனியில் திகழ்ந்துள்ளது.

கடந்த 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ரேஸ் கோஸ் சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி கிண்ணக் கால்பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியானது (தேசிய பாடசாலை) போட்டித் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அந்தவகையில் தொடரின் சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் அஹமட் நிபால் பெற்றுக்கொண்டார். இந்த சர்வதேச மைதானத்தில் அஹமட் நிபால் தனதாக்கிக் கொண்ட இரண்டாவது சிறந்த கோல் காப்பாளருக்கான விருது இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை பாடசாலை மட்ட கால்பந்தாட்ட வரலாற்றில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியை (தேசிய பாடசாலை) கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உட்பட கல்லூரியின் ஆசிரியர்களும் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றது.

# அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் மாணவர்கள் கௌரவிப்பும்







(ரவ்பீக் பாயிஸ் )

திருகோணமலை மட்கோ அல்-ஹுசைனிய்யா அஹதியா பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் திருகோணமலை மாவட்ட மட்டத்தில் அஹதியா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது

மட்கோ அல்-ஹுசைனிய்யா ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் இன்று பிற்பகல் குறித்த பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும் அல்-ஹுசைனிய்யா அஹதியா பாடசாலையின் தலைவர் ஏ.சி.எம்.நசீர் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது

குறித்த விழாவில் விசேட அதிதிகளாக திருகோணமலை மாவட்ட இஸ்லாமிய கலாச்சார உத்தியோகத்தர் சிபானி, திருகோணமலை மாவட்ட அஹதியா சம்மேளனத்தின் தலைவர் மௌலவி. வை. எம். ஹதியத்துல்லாஹ், திருகோணமலை அல்-மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் அஷ்-ஷெய்ஹ்.அலாவுதீன், முன்னாள் அதிபரும் தோப்பூர் ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவருமான எஸ்.டி.எம்.நளீம் நூழாரி, மாட்கோ கிராம உத்தியோகத்தர் எல்.ஜி.எல்.காஞ்சனா, அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.லோஜினி மற்றும் அல் - ஹுசைனிய்யா பள்ளிவாசல் தலைவர் ரியாழ் ரகுமான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் 150க்கும் மேற்பட்ட அஹதியா மாணவர்கள் பங்கு பற்றிய மாவட்ட மட்ட அஹதியா போட்டியில் அல் குர்ஆன் மனனப் போட்டியில் முதலாம் இடத்தை வென்ற எம்.கே. மின்ஹா,துஆ மனனப்போட்டியில் முதலாம் இடம் வென்ற ஓ.எம். முர்ஷிதா மற்றும் மாவட்ட மட்ட அஹதியா போட்டியில் இஸ்லாமிய வினா விடைப் போட்டியில் இரண்டாம் இடம் வென்ற எம்.ஆர்.ஏ.இலாஹ், அல்குர்ஆன் மனனப் போட்டியில் மூன்றாமிடம் வென்ற ஆர்.எம். ஹபீஸ் மற்றும் ஹதீஸ் மனனப் போட்டியில் மூன்றாமிடம் வென்ற எம்.எப். எம்.அதீக் ஆகியோர் திருகோணமலை மாவட்ட இஸ்லாமிய கலாசார உத்தியோகத்தர் சிபானி அவர்களினால் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் மாவட்ட ரீதியாக இடம் பெற்ற அஹதியா பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் கதை கூறல் போட்டியில் முதலாம் இடம் வென்ற ஓ.எம்.முர்ஷிதா, இஸ்லாமிய கீதம் போட்டியில் முதலாம் இடம் பிடித்த எம்.கே.இல்மான், இஸ்லாமிய வினா விடைப் போட்டியில் முதலாம் இடம் வென்ற எம்.கே.மின்ஹா, இஸ்லாமிய வினா விடைப் போட்டியில் இரண்டாம் இடம் வென்ற எம்.எம்.எப்.முஷர்ரிபா மற்றும் அரபு எழுத்தணி போட்டியில் இரண்டாம் இடம் வென்று சாதனை படைத்த எஸ்.எம்.சகிப் ஆகியோர் கிராம உத்தியோகத்தர் எல்.ஜி.எல்.காஞ்சனா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.லோஜினி அகியேர்களினால் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்

மேலும் குறித்த பரிசளிப்பு விழாவில் அல்-ஹுசைனிய்யா அஹதியா பாடசாலையின் பாடசாலை மட்டத்தில் பல போட்டிகளில் தமது திறமைகளை வெளிக்காட்டிய பல மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்

குறித்த பரிசளிப்பு விழாவில் குறித்த அஹதியா பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பிரதேச சங்கங்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் பெருமளவிலான பிரதேசவாசிகள் பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது

# புலமைப்பரிசில் பரீட்சையில் வரலாற்று சாதனை படைத்த புத்தளம் பெருக்குவற்றான் அல்-மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள்



(எம்.எஸ்.எம். ஸப்வான்)

2021-2022 கல்வி ஆண்டிற்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் படி புத்தளம் பெருக்குவற்றான் அல்-மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலை வரலாற்றில் 5 பேர் ஒரே தடவையில் சித்தியடைந்துள்ளனர்.

M.W. M. அஸ்ஜத் 162,
S.F.சல்மா 161,
M.H.M. ஹம்தி 158,
MR.F. றுஸ்தா 148,
M.F.மஹ்தியா 146

ஆகிய மாணவர்களே இவ்வாறு வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் தரம் 5ல் 22 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். இவர்களில் 20 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேலும் 2 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலும் பெற்று பாடசாலையின் 70 வருட வரலாற்றில் 100% சித்தியைப் பெற்றுள்ளனர்.

இவ் வெற்றிக்கு வழிகாட்டியவர் வகுப்பாசிரியை F.P.M. டொரின் மங்கலிக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

★ படத்தில் பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பாசிரியை உடன் சித்தியடைந்த மாணவர்களை காணலாம்.

# கும்பாபிஷேகத்திற்கான பதாகை அறிவித்தல் வெளியீட்டு விழா

வரலாற்று பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கான பதாகை மற்றும் அறிவித்தல் பிரசுரம் வெளியீட்டு விழா ஆலயத்தில் பிரதம குரு சிவசிறி சண்முக மகேஸ்வர குருக்கள் முன்னிலையில், ஆலயத் தலைவர் கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற போது....

படங்கள்: காரைதீவு நிருபர் சகா



## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 17

# மூத்த எழுத்தாளர் கலாபூணம் பிச்சைத்தம்பி அஸீஸ் (பீ.ரீ.அஸீஸ்) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

**இன்றைய உலகில் இலக்கியம் என்பது சமூகப் பொறுப்புள்ள எழுத்தாளர்கள் ஒவ்வொருவரின் படைப்பாகவே படைக்கப்படுகின்றது. இவ்வாறான படைப்பிலக்கியங்கள் மக்களது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் சமுதாயத்தின் நிலைக் கண்ணாடியாக எடுத்தியம்புகின்றன. ஒவ்வொரு எழுத்தாளரும் எழுதும் படைப்புக்கள் பல ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன. கருத்துக்களை நன்றாக வெளிப்படுத்தும் விதத்தில் மொழியைப் பயன்படுத்தக்கூடிய திறமையான எழுத்தாளர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு வகையான இலக்கிய வகைகளை தேர்வு செய்து சமூகத்திற்கான தங்களது கலைச் சேவைகளை ஆற்றி வருகின்றனர்.**

அந்தவகையில், திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியாவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு 1951 ஆம் ஆண்டு பிச்சைத்தம்பி காஜரா உம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியை பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையிலும், கிண்ணியா மத்திய கல்லூரியிலும் பயின்ற இவர் பொதுச் சுகாதார வெளியக உத்தியோகத்தராக பணியாற்றி 2008இல் ஓய்வு பெற்றவராவார். பீ.ரீ.அஸீஸ் என்ற பெயரில் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமான இவர் தனது இளமைக் காலத்தில் இலக்கியத்தின் பால் பெரிதும் ஈர்ப்பினைக் கொண்டவராக காணப்பட்டார். அதன் நிமித்தம் இவரின் இலக்கியத் துறையின் முதற் பிரவேசம் 1974இல் தினகரன் பத்திரிகையில் வெளியான 'பேசும் தெய்வம்' என்ற சிறுவர் பாடலாகும். அதனைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரை, கவிதை, சிறுவர் பாடல், கிராமிய, நாட்டார் கலை, விமர்சனங்கள் போன்ற பல்வேறுபட்ட துறைகளிலும் தன்னை ஈடுபடுத்தி பன்முக ஆளுமை கொண்ட பல்துறைக் கலைஞராக விருட்சமாக உயர்ந்து காணப்படுகின்றார்.




மேலும் பத்திரிகைகளுக்கும் தனது சுய ஆக்க படைப்புகளையும் எழுதி வருகின்றார். இலக்கியத் துறையில் முன்னோடிகளில் ஒருவராக திகழும் இவர் இதுவரையில் சுமார் 20ற்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்து இலக்கிய உலகில் தனக்கென்ற ஓர் அடையாளத்தைப் பெற்று நாடறிந்த எழுத்தாளராக திகழ்கின்றார். தனது ஒவ்வொரு படைப்புகளிலும் அதீத கவனம் செலுத்தி முனைப்புடன் செயற்பட்டு வருகின்ற இவரது நூல்களுக்கு கிழக்கு மாகாண சாஹித்திய விருது, சிறந்த நூலுக்கான விருது கிடைக்கப் பெற்றுள்ளதோடு இவரது நூல்கள் நூலகங்களுக்குப் பொருத்தமான நூல் என்ற தகுதிச் சான்றிதழ், வெளியீட்டு அனுசரணை என்பவற்றை தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் மூலமாக பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பல தசாப்த காலங்களாக இலக்கியத் துறையில் ஈடுபட்டு வரும் மூத்த கலைஞரான இவர் தணியாத தேடலின் தாகத்தாலும், எழுத்தின் வேகத்தாலும் அண்மைக் காலமாக 'நூல் திறன் நோக்கு' என்ற தொடரை முகப்புத்தகத்தில் எழுதி வருகின்றார். இவ்வாறாக பல் துறையிலும் விற்பன்னராக காணப்படுகின்ற இவர் இன, மத வேறுபாடின்றி அனைத்து கலைஞர்களுடனும் இன்முகத்துடன் நட்புடைமையுடன் உறவாடி வருவதோடு வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருகளுக்கான பாதையினை பெற்றுக்கொடுப்பதற்கும் வழியமைத்து, ஊக்கமளித்து வருகின்றார் என்பது பதிவிடக்கூடிய விடயமாகும். இலக்கியத்தில் ஒரு புதிய பரினாமத்தை தனது எழுத்தாக்க படைப்புகள் மூலம் ஏற்படுத்தி தான் பிறந்த கிண்ணியா மண்ணுக்கு மட்டுமல்லாது



தொகுப்பு :-
திருமலை தட்சாயினி ஞானசங்கரன்



திருகோணமலை மாவட்டத்திற்கும் அளவில்லா புகழையும், பெருமையையும் நிலைநாட்டி இன்று வரை கலைச்சேவை ஆற்றி வரும் கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ் கலைஞர் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்வி காணலை இங்கு காணலாம்.


**? இலக்கியத்துறையில் உங்களுக்கு ஏற்பட்ட ஆர்வம், அதன் மீதான பயணம் குறித்து?**

இலக்கியத் துறையில் பிரகாசிக்க வேண்டுமென்றொரு ஆர்வம் சிறு வயது முதல் எனக்குள் முளைவிட்டிருந்தது. அதனால் பல்வேறு நூல்களையும் தேடிப் படிப்பதன் மூலம் அறிவு விருத்திக்கும், ஆளுமை விருத்திக்கும் வழி பிறந்தது. 1974இல் தொடங்கிய இலக்கிய முயற்சி பல்வேறு காரணிகளால் 1981இல் தடைபட்டுப் போனது. 2011ஆம் ஆண்டு வரை மௌனிப்பாக இருந்ததன் பின்னரான இலக்கியத்தின் மீதான மீள் எழுச்சி மிக நன்றாக அமைந்ததில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெறவும் வழி வகுத்தது. தற்போது இலக்கிய முயற்சியானது மிக நன்றாக பிரகாசித்துக் செல்கின்றது.



**? இலக்கியத்துறையில் நீங்கள் இதுவரையில் எழுதி வெளியிட்ட நூல்கள் பற்றிய விபரம்?**

இதுவரையில் சுமார் 20ற்க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். 2011இல் உணர்வூட்டும் முத்துக்கள், சிறுவர் பாடல்கள், அஸீஸ் கவிதைகள், 2012இல் தாலாட்டுப் பாடல்கள், நாட்டார், கிராமிய பாடல்கள், உதயம், மாண்புறும் மாநபி, 2014இல் தென்றலே வீசி வா, சுட்டபழமே சுவை அமுதே, 2015இல் மனசெல்லாம் மகிழ்கிறது, துணிந்து நில், 2016இல் சின்னப் பாப்பா, நினைவொன்றே போதும், 2017இல் செவ்வானச் சித்திரம் நபிகள் நாயகம், 2020இல் ஆர உட்டுத் தேடுவதோ, மஞ்சள் குருவி, 2021இல் கிராமிய சுகந்தம், தாயன்பு இவற்றோடு கவிஞர் அண்ணல் அவர்களின் 'அண்ணல் கவிதைகள்' நூலையும் மீள் பதிப்புச் செய்துள்ளேன்.




**? பல்துறைக் கலைஞராக திகழும் உங்களது கலைச்சேவை திருகோணமலை மாவட்டத்தில் எவ்வாறு உள்ளது?**


திருகோணமலை மாவட்டத்தில் எனது கலைச் சேவை மிக நன்றாகவே உள்ளது. இங்கு நிகழும் அனேகமான இலக்கிய நிகழ்வுகளில் பங்கு கொள்கிறேன். சகோதர இனமான தமிழ் எழுத்தாளர்களின் நன்மதிப்பும், ஆதரவும் நிறையவே கிடைக்கப் பெறுகிறது. தமிழ், முஸ்லீம் படைப்பாளிகளின் ஆதரவும், அரவணைப்பும் நிறையவே இருந்து கொண்டிருக்கிறது.

**? நீங்கள் வாழும் கிண்ணியாவில் உங்கள் கலைப் பணிக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது?**

கிண்ணியா பிரதேசத்தைப் பொறுத்தவரை இன்றைய காலகட்டத்தில் உயிர்வாழுகின்ற மூத்த இலக்கியவாதி என்ற வகையில் எனக்கென ஒரு தனியிடமிருக்கின்றது. மூத்தோர், இளையோர் இருபாலர் மத்தியிலும் நன்மதிப்போடும், அன்போடும் நோக்கப்படுகின்றேன்.

**? முகப்புத்தகத்தில்'நூல் திறன் நோக்கு' என்ற தொடரை எழுதி வருகின்றீர்கள் அது குறித்து?**

இதுவரையில் 80ற்க்கும் மேற்பட்ட திறன் நோக்கினை முகப்புத்தகத்திலும், பத்திரிகையிலும் எழுதி வருகின்றேன். படைப்பாளிகளின் படைப்புகளை பிறர் அறியச் செய்வதோடு அவர்களின் ஆற்றல், அறிவுத் திறன் விருத்தி மற்றும் செயற்பாடு என்பனவும் இதன் மூலம் வெளிக் கொணரப் படுகிறது. இதனூடாக ஈழத்து எழுத்தாளர்களும் அவர்களது படைப்பாற்றலும் சர்வதேச மயப்படுத்தப்படுவதோடு அவர்களுக்கான அங்கீகாரமும் கிடைக்கப் பெறுகிறது.




**? உங்களது சமூகத்தில் இளைஞர்களின் இலக்கியத்துறை மீதான ஈடுபாடு எவ்வாறு உள்ளது?**

நான் சார்ந்த சமூகத்து இளைஞர்கள் இலக்கியம் சார் நடவடிக்கைகளில் நிறையவே ஈடுபடுவதோடு பகுதி நேர, முழு நேர வேலையாகக் கூட இதனை முன்னெடுத்துச் செல்கின்றனர். நவீனத்துவ, நவீனத்துவத்துக்குப் பிந்திய படைப்பாக்கங்களில் அவர்களது கவனம் தற்போது திசை திரும்பியுள்ளது. தேசிய, சர்வதேச மட்டங்களிலும் குறிப்பாக தமிழகத்திலும் இவர்களின் படைப்புக்கள் பிரசுரம் பெற்று வருவதில் அவர்களின் எழுத்துப் பணியின் முன்னெடுப்புகள் வெளிச்சமிடப்படுகின்றன.

**? இத்துறையில் நீங்கள் பெற்ற சாதனைகள், விருதுகள் குறித்து?**

இலக்கியத்துறையில் எனக்கு இதுவரையில் பல்வேறு விருதுகளும், பாராட்டுக்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக பிராந்திய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பல்வேறு விருதுகளும், பட்டங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த வகையில் குறிப்பிட்டு கூறுவதாயின் 2012இல் எனது சிறுவர் பாடல் நூலுக்கான கிழக்கு மாகாண சாஹித்திய விருதும், அதே ஆண்டில் தேசகீர்த்தி விருதும், 2013 இல் அரச விருதான கலாபூஷணம் விருதும், கவிச்சுடர் விருதும், 2014இல் வித்தகர் விருதும், 2015இல் எனது 'சுட்டபழமே சுவை அமுதே' என்ற நூலுக்கான கிழக்கு மாகாண சிறந்த நூல் விருதும், 2016இல் சரத் சந்திர ஜெயக்கொடி விருதும், அதே ஆண்டில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு பொன்விழா மாநாட்டில் கலை இலக்கிய விருதும், 2021இல் வாழ்நாள் சாதனையாளர் விருதும் கிடைக்கப்பெற்றுள்ளன.

**? 'ஒரு சிறந்த கலைஞனானவன் இன, மத வேறுபாடின்றி தனது கலையினை அனைவரிடத்தும் கொண்டு செல்வான்'அது குறித்து உங்களின் கருத்து?**

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க..

திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை - 17

# மூத்த எழுத்தாளர் கலாபூணம் பிச்சைத்தம்பி அஸீஸ் (பீ.ரீ.அஸீஸ்) கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

கொள்ள முடியாது. ஏனெனில் இவற்றையெல்லாம் கடந்து சென்றவன் தான் கலைஞன், படைப்பாளன். அந்தவகையில் ஒரு படைப்பாளன், கலைஞன் தனது செயற்பாட்டினால் மனித சமூகத்தில் மதிப்பு பெற்று காலம் கடந்தும் பேசப்படும் உயர்நிலையையும் அடைந்து உலகளவில் பிரகாசிக்கக் கூடியவனாக திகழ்கின்றான்.

**? உங்களது இலக்கியத்துறைப் பயணத்தில் இன்று வரை உறுதுணையாக இருப்பவர்கள் பற்றி?**

இலக்கியத் துறையில் எனது முன்னேற்றம், பங்களிப்பு, ஆக்கச் செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் மிக்க கரிசனையோடு ஆக்கம், ஊக்கம், ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை முதலியவற்றை எல்லா சந்தர்ப்பங்களிலும் நல்கி இலக்கிய எல்லைக்கான பயணத்தில் என் கூடவே இருந்து செயற்படுபவர்களாக சட்டத்தரணி டாக்டர் ஹில்மி மகரூப், படைப்பாளி வெலிகம ரிம்ஸா முஹம்மத், கவியரசி கு.அ. இஸ்மத் பாத்திமா ஆகிய மூவருக்கும் முதல் நன்றியினை தெரிவிப்பதில் மனம் எப்பொழுதுமே முன்னிலை வகிக்கின்றது.


**? எதிர்காலத்தில் உங்களது படைப்புகளாக வெளிவரவிருப்பவை பற்றி?**

இவ்வருடத்தில் எனது புதிய படைப்பாக 'முதுமையில் விளைந்த புதுமைகள்' என்ற நூல் வெளிவரவிருக்கிறது. 50 நூல்களின் திறன் நோக்கு திரட்டாக இது அமைந்துள்ளதுடன் 320 பக்கங்களையும் உள்ளடக்கியதாகவுள்ளது. மேலும் சிறுவர் கதை நூலொன்றும் ஆயத்த நிலையில் உள்ளது. இவைகள் வெளிவருவது கால சூழ்நிலையைப் பொறுத்தே உள்ளது. காரணம் விலைவாசியேற்றத்தினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளமே ஆகும்.









**? கலை மன்றங்களிலும், சமூக அமைப்புக்களிலும் உங்களது செயற்பாடு பற்றி?**

கலை மன்றங்களிலும், சமூக சேவை அமைப்புக்களிலும் எனக்கு நிறையவே ஈடுபாடு உண்டு. அவ்வகையில் 1971இல் முகம்மதிய கிராம அபிவிருத்திச் சங்க தலைவர், 1972இல் முற்போக்கு வாலிப மன்ற தலைவர், 1981இல் Y.M.M.A தலைவர், 1982இல் இளைஞர் சேவைகள் மன்ற தலைவர், பள்ளிவாயல் நிர்வாக சபையில் தொடர்ச்சியாக 20றக்கும் மேற்பட்ட வருடகாலம் செயலாளராக பதவி வசிப்பு, 2015 தொடக்கம் 2021 வரை வட்டமடு விவசாய சம்மேளன தலைவராகவும் இருந்துள்ளேன். தற்சமையம் முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தின் தலைவராக 2016ஆம் ஆண்டு முதல் இன்று வரை சிறப்பாக செயற்பட்டு வருகின்றேன். எமது கலை சார்ந்த செயற்பாடு பெரும் வரவேற்பை பெற்றுள்ளதோடு நன்மதிப்பையும் ஈட்டித் தந்துள்ளது.

**? நிறைவாக, மூத்த கலைஞராக உங்களது அனுபவத்தினூடாக சாதிக்க நினைக்கும் தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

இன்று இளம் தலைமுறையினருக்கென கூறக் கூடியது எதுவுமில்லையென்றே தோன்றுகின்றது. ஏனெனில் அவர்களது செயற்பாடுகளில் பாரிய முதிர்ச்சி தென்படுகிறது. அவர்கள் நிறைவு பெற்ற படைப்பாளிகளாக திகழ்கின்றனர். எதிர்கால இலக்கியம் அவர்களின் கைகளில் சென்றடையப் போகிறது. அப்போது அவர்கள்தான் மூத்தோர், முதியோர் எல்லாம். அவர்களின் வருங்காலம் வளமாக சிறக்க வாழ்த்துக்கள். எனக் கூறிக் கொண்டு எம் போன்ற மூத்த கலைஞர்களுக்கான களத்தினை 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஓர் பார்வை' என்ற பகுதியின் ஊடாக வாய்ப்பளித்து வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்வதோடு இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

அந்த வகையில் இன,மத வேறுபாடின்றி தனது எழுத்திலக்கியப் படைப்புகளை முன்னெடுத்துச் செல்கின்ற மூத்த பல்துறை கலைஞரான இவர் மென்மேலும் எழுத்து இலக்கியத்துறையில் பல படைப்புக்களைப் படைத்து உலகளவில் கலைச்சேவை ஆற்றி விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்று தேகாரோக்கியத்துடன் இருப்பதற்கு பிரார்த்திப்பதோடு இப்பணித் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

தொடரும்.....
கலைஞர்களுக்கான
தேடலின் பயணத்தோடு

நாள் தோறும் செய்திகளை வீடியோ வடிவில் பார்க்க
Supeedsamtv.com




supeedsam epaper, supeedsam videos, supeedsam news
www.supeedsam.com

# 'பால்நிலை வேறுபாடுகள் மற்றும் தொழிற்சந்தை சவால்கள்' தலைப்பில் ஐ.நா. பெண்கள் அமைப்பு வெளியிட்ட அறிக்கை

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில், குடும்பம் அல்லது சமூகக் காரணிகளால் மட்டுமல்லாது, தொழில்வழங்குனர்களாலும் தொழிற்சந்தையில் பெண்களுக்கு சமமான அணுகல் மறுக்கப்படுகிறது. இலங்கையில் பெண் தொழிலாளர்களுக்கான கேள்வி: பால்நிலை வேறுபாடுகள் மற்றும் தொழிற்சந்தை சவால்கள் என்ற தலைப்பில் ஐ.நா பெண்கள் அமைப்பு 25.03.2022 கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமா நிலையத்தில் வைத்து வெளியிட்ட அறிக்கையின் மையக்கரு இதுவாகும். இந்த அறிக்கையானது, பெண்கள் ஊதியம் பெறும் தொழிற்படையில் நுழைவதைத் தடுக்கும் தொழில் வழங்குனர்கள் மற்றும் நிறுவனங்களின் தரப்பில் அதிகம் ஆராயப்படாத காரணிகளை விளக்கும் நாட்டிலேயே முதலாவது அறிக்கையாகும்.




இவ் அறிக்கை வெளியீட்டு நிகழ்வின் போது, இந்த கற்கை உத்தியோகபூர்வமாக டாக்டர். சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாடு இராஜாங்க அமைச்சர் மற்றும் மகளிர் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவி மற்றும் குமாரி ஜெயசேகர, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரின் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

வெளியீட்டு நிகழ்வைத் தொடர்ந்து அரசு, சிவில் சமூகம் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பிரதான உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இவ் அறிக்கையின் சுருக்கமம் பின்வருமாறும் அதிதிகளது கருத்துக்ளும் பறிமாறப்பட்டன.

2019 இல், இலங்கையில் பணிபுரியும் வயதுடைய பெண்களில் 367 மட்டுமே ஊதியம் பெறும் பணியில் ஈடுபடுவதற்கு விருப்பத்துடனும் தயாராகவும் இருந்தனர். ஊதியம் பெறாத பராமரிப்பு பணிகள், திறன் பற்றாக்குறை மற்றும் பால்நிலை விழுமியங்கள் மற்றும் ஒரே மாதிரியான உள எண்ணங்கள் போன்ற சமூக-கலாச்சார காரணிகள், முறைசார் தொழிற்படையில் பெண்கள் ஈடுபடுவதைத் தடுக்கும் அடிப்படைக் காரணிகளாக வழங்கல் பகுதி பகுப்பாய்வுகள் மூலமாக அடையாளம் காணப்பட்ட போதிலும், இந்த அறிக்கை தொழில் வழங்குனர்களால் உருவாக்கப்படும் கேள்விப் பகுதி தடைகள் குறித்த நமது புரிதலில் குறிப்பிடத்தக்க இடைவெளியை சந்திக்கிறது.

உதாரணமாக, அறிக்கையிலிருந்தான புதிய பகுப்பாய்வு பின்வருவனவற்றைக் காட்டுகிறது:

★ ஆண்களை விட பெண்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுவது பகுதியளவில், குறைந்த திறன் கொண்ட பெண் தொழிலாளர்களுக்கான தொழில் வழங்குனர்களின் கேள்வியை பால்நிலை அடிப்படையிலான தொழிற்பிரிப்பு சக்தி வாய்ந்ததாக மாற்றுகிறது;

★ பெண்களுக்கு நெகிழ்வான வேலை நேரம் மற்றும் இரவு நேர வேலைகளை வழங்குவதில் இருந்து சட்டப்பூர்வமாக தடைசெய்யப்பட்ட தொழில்வழங்குனர்கள் மற்றும் மகப்பேற்று சலுகைகளுக்கு நிதியளிக்க முடியாதவர்கள், ஒப்பீட்டளவில் குறைவான பெண்களை பணிக்கு அமர்த்தியுள்ளனர்;

★ பெண்கள் மேற்கொள்ளக்கூடிய மற்றும் மேற்கொள்ளமுடியாத பணிகள் தொடர்பான எண்ணங்களைக் கொண்டுள்ள தொழில்வழங்குனர்கள், குறைவான பெண்களை பணிக்கு அமர்த்தியுள்ளனர்;

★ நடுத்தர அளவிலான தொழில்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள், குறிப்பாக ஆங்கில மொழித் திறன் மற்றும் பிரச்சினைகளைக் கற்றுத் தீர்க்கும் திறன் ஆகிய திறன்களில் அதிகளவான பற்றாக்குறைகளைக் கொண்டுள்ளதாக உணரப்பட்டனர்;

★ பதிலளித்த ஆண்களில் நான்கில் மூன்று பங்கினர் பெண் தொழிலாளர்களுக்கு எதிராக அறியாமலே பாரபட்சம் கொண்டவர்களென்பதுடன் பெண்களை பணிக்கு அமர்த்துவது குறைவாகும்.

★ இயலாமைகளை உடைய பெண்களை பணிக்கு அமர்த்துவதற்கு தொழில்வழங்குனர்கள் தயாராக இருந்தாலும், அவர்களுக்கு அனுபவம் மற்றும் பயிற்சி அளிப்பதற்கான வாய்ப்புகள் பற்றாக்குறையால் தடைபட்டுள்ளனர்.

ஏனைய வளர்ந்து வரும் பொருளாதாரங்களைப் போலன்றி, இலங்கையில் ஏற்றுமதி நோக்குநிலையானது பெண் தொழிலாளர்களுக்கான அதிகரித்த கேள்வியுடன் தொடர்புபடுத்தப்படவில்லை என்பதுடன், இது சமீபத்திய காலங்களில் பொருளாதாரத்தின் பலவீனமான ஏற்றுமதி நோக்குநிலையை பிரதிபலிக்கிறது என்பதையும் கண்டறிவுகள் வெளிப்படுத்தின. தொழிலாளர் திறன்களை மறுசீரமைப்பதற்கு வணிக நடவடிக்கைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் நிறுவனங்கள் பின்தங்கியிருப்பதாகத் தெரிகிறது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைப்புகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலாலும் பெருந்தொற்றுக்களின் போது பணியாளர்கள் வீட்டிலிருந்து பணி செய்வதற்கான அனுபவமும் வளங்களும் பற்றாக்குறையாலும் கட்டுப்படுத்தப்பட்டபோது இது மிகவும் தெளிவாகத் தெரிந்தது. இந்த டிஜிட்டல் பிரிப்பு, அதிகரித்த பணி வாய்ப்புகளை வழங்குவதற்கு சாத்தியத்துடன் வரவிருக்கும் தொழிற்துறைகளில் பெண்களின் ஈடுபாட்டிற்கு பெரும் தடையாக உள்ளது.



இலங்கையில் ஐ.நா.வின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டி இந்த வெளியீட்டு நிகழ்வில் பேசுகையில், பாரியளவில் பெண்களுக்கான மற்றும் பொருளாதாரத்திற்கான குறைந்த தொழிற்படை பங்கேற்பின் தாக்கங்கள் தீவிரமானவை. அதனால்தான் இந்தப் புதிய ஆராய்ச்சி அறிக்கை இன்றியமையாததுடன் இது நீண்ட காலப் பொருளாதாரக் கொள்கை வகுப்பில் பரிசீலிக்கப்பட வேண்டும். தொழிற்படையில் பெண்களின் முழுமையான ஈடுபாட்டை ஆதரிப்பதற்கு அரசாங்கம் மற்றும் தொழிற்துறை கொள்கைகள் முக்கியமானதாக இருக்கும் ஒரு வரைபடத்தை இது வழங்குகிறது' என்று சுட்டிக்காட்டினார்.

ஐ.நா பெண்கள் அமைப்பின் இலங்கை நாட்டிற்கான பிரதிநிதியான ரமாயாசல்கடோ குறிப்பிடுகையில்: கௌரவமான வேலைக்கான சூழ்நிலையை உருவாக்குதலும் ஊழியர்களை பாகுபாட்டிலிருந்து பாதுகாப்பதும் அடிப்படை மனித உரிமைகளாகும். தற்போதுள்ள தொழிலாளர் சந்தைகளில் சமமாக பங்கேற்கும் பெண்களின் திறன் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பொருளாதார தீர்மானம் மேற்கொள்ளலில் அர்த்தமுள்ளதாக பங்குகொள்ளும் திறன் ஆகியவை பெண்களின் உரிமைகள் மற்றும் பால்நிலை சமத்துவத்தை புரிந்துகொள்வதன் மையமாக உள்ளன. இந்த கற்கையில் கீழே விவரிக்கப்பட்டுள்ள குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை வழிகாட்டுதல்கள், ஊதியம் பெறும் பணியாளர்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதில் அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறோம்' என்றார்.

2030 நிகழ்ச்சி நிரலின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய குமாரி ஜயசேகர, இந்த விடயத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால், அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைந்த அணுகுமுறையில் பணியாற்ற நாங்கள் வரவேற்கிறோம். பெண் தொழிலாளர்களுக்கான கேள்வியை அதிகரிப்பதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், கொள்கை உரையாடலில் ஈடுபடல் மற்றும் உருவாக்கம், தந்திரோபாய நடவடிக்கைகளின் வடிவமைத்தல் மற்றும் இந்த நடவடிக்கைகளின் அமுல்படுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகிய செயன்முறைகளில் ஈடுபடுகின்ற அரச, தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற துறைகளின் செறிவான, ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது' என்று சுட்டிக்காட்டினார்.

பாகுபாடு அல்லது பாரபட்சம் இன்றி ஊதியத்திற்காக பணிபுரியும் தெரிவை பெண்கள் கொண்டிருப்பதனை உறுதி செய்வதற்கு, இலங்கையின் முறைசார் நிறுவனங்களில் சிறந்த கொள்கை, செயற்பாடு மற்றும் முதலீடு ஆகியவற்றிற்காக ஐ.நா பெண்கள் அமைப்பு அழைப்பு விடுக்கின்றது. இது குறிப்பாக இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு உதவும் வகையில், உற்பத்திக் கட்டமைப்புகளை பல்வகைப்படுத்தவும் மேம்படுத்தவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் பேரினப் பொருளாதார, கைத்தொழில் மற்றும் வர்த்தகக் கொள்கைகளை உருவாக்குதலை உள்ளடக்குகின்றது. மேலும், தற்போது நிலவும் பெருந்தொற்றின் தாக்கத்தில், உற்பத்தி செயன்முறைகளை மேம்படுத்த உதவும் டிஜிட்டல் மயமாக்கல், தன்னியக்கம் மற்றும் வீட்டிலிருந்து பணி செய்யும் ஏற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

பெண்களுக்கு நடுத்தர அளவிலான தொழிற்திறன்களில், குறிப்பாக ஆங்கில மொழித் திறன்களில் பயிற்சி அளிப்பதன் முக்கியத்துவத்தையும் கொள்கைப் பரிந்துரைகள் சுட்டிக்காட்டுகின்றன. இயலாமைகளை உடைய பெண்களை பணிக்கு அமர்த்துவதில் தொழில்வழங்குனருக்கு அதிக நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஆதரவான நடவடிக்கைககளும் தேவைப்படுகின்றன. சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்கள் (SME) பெண் தொழிலாளர்களுக்கான அதிக கேள்வியை உருவாக்குபவை என்பதால் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்கள்(SMEs), பெண்களின் தொழில்முயற்சியாண்மை, உரிமை மற்றும் முகாமைத்துவத்தை ஊக்குவிப்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது,.

இறுதியாக, பெண்களுக்கு நெகிழ்வான வேலை நேரம் மற்றும் இரவு நேர வேலைகளை வசதிப்படுத்துவதற்காக தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதுடன் மகப்பேறு நலன்களுக்காக ஒரு சமூக நிதியை அமைக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. திருமணத்திற்குப் பிறகும் பெண் பணியாளர்களைத் தக்கவைத்துக்கொள்ளும் குடும்ப-நட்புறவான பணியிடக் கொள்கைகளை ஊக்குவிப்பது, ஊதியம் பெறும் தொழிற்படையில் அதிகமான பெண்கள் நுழைவதை உறுதி செய்யும்.